தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032

தொலைபேசி 044–22201337

மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண். 56/பேரூ/2016

நாள் 03.02.2022

திரு. அ.சி. முத்தரசு,
திருநாகேஸ்வரம், தஞ்சாவூர் மாவட்டம் ... முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
திருநாகேஸ்வரம் பேரூராட்சி ... எதிர்மனுதாரர்

தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் வட்டம், திருநாகேஸ்வரம் மற்றும் அஞ்சல், கும்பகோணம் சாலை, 2A, சிங்காரத் தோட்டம் என்ற முகவரியில் வசிக்கும் திரு..அ.சி. முத்தரசு என்பவரின் 04.05.2016 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 06.05.2016ல் பெறப்பட்டு, 56/2019 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் வட்டம், திருநாகேஸ்வரம் மற்றும் அஞ்சல், கும்பகோணம் சாலை, 2A, சிங்காரத் தோட்டம் என்ற முகவரியில் வசிக்கும் திரு.அ.சி. முத்தரசு என்பவர் தமது 04.05.2016 நாளிட்ட முறையீட்டு மனுவில் தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் வட்டம், 31 அணக்குடி திருநாகேஸ்வரம் கிராமம் மற்றும் பேரூராட்சியில் இயக்குநர், நகர் ஊரமைப்புத் துறை, சென்னை அவர்களால் ஒப்புதல் வழங்கப்பட்ட குடியிருப்பு மனைப்பிரிவு தொழில்நுட்ப வரைபடத்தை மோசடியாக திருத்தி அரசுக்கு இழப்பு ஏற்படுத்திய நபர்கள் மீதும், பூங்கா மற்றும் பாதைகளை மீட்காமல் மீண்டும் மோசடி வரைபடத்தைக் கொண்டு கட்டிட அனுமதி வழங்கிய மற்றும் தங்கும் விடுதி கட்டிடத்திற்கு அனுமதி வழங்கிட முயற்சிக்கும் திருநாகேஸ்வரம் பேரூராட்சி செயல்

அலுவலர் திரு. நந்தகுமார் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கவேண்டி தம்மால் 22.06.2015ல் மாவட்ட ஆட்சித் தலைவர், தஞ்சாவூர் மாவட்டம் அவர்களுக்கு புகார் மனு அளிக்கப்பட்டதென்றும், நகர் ஊரமைப்புத் துறை துணை இயக்குநர் அலுவலகம், தஞ்சாவூர் கடிதத்தின்படி அனுமதியற்ற கட்டுமானத்தின் மீது எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள்ளாமல் புகாருக்குரிய மனைப் பிரிவில் தொடர்ந்து இயங்கிவரும் விடுதி (+2 தளம்) இயங்கிவருவதற்கு உறுதுணையாக இருந்துவருவதாகவும், புகாருக்குரிய மனைப்பிரிவு 2003–ஆம் ஆண்டு நகர் ஊரமைப்புத் துறையின் ஒப்புதல் பெற்றது என்று மீண்டும் பொய் கூறுவது; நகர் ஊரமைப்புத் துறை, சென்னை அவர்களால் வழங்கப்பட்ட புகாருக்குரிய பிரிவு தொழில்நுட்ப வரைபடம் அலுவலக கோப்பில் இல்லை என்று கூறுவது ஆகிய குற்றச்சாட்டுகளின்படி திருநாகேஸ்வரம் பேரூராட்சி செயல் அலுவலர் திரு. இரா. நந்தகுமார் மீது உடன் விசாரணை நடவடிக்கை எடுத்திடவும், மேற்படி புகாருக்குரிய மனைப்பிரிவில் சட்டத்திற்கு விரோதமாக ஆக்கிரமித்து, பூங்கா, சாலைகளை மீட்டு அரசுக்கு திரும்பப் பெற நடவடிக்கை எடுக்கவும், செயல் அலுவலர் மீது நடவடிக்கை எடுத்திடுமாறும், மேலும் பணி ஒய்வுபெறும் திருநாகேஸ்வரம் செயல் அலுவலர் திரு. நந்தகுமார் மேற்படி புகாருக்குரிய மனைப்பிரிவில் தங்கும் விடுதி (+2) கட்டிடத்திற்கு பகுதி பகுதியாக அனுமதியளிக்க உத்தேசித்துள்ளதாக தெரியவருகிறது என்றும் குறிப்பிட்டு, தனது புகார் மனு மீது விசாரணை மேற்கொண்டு திருநாகேஸ்வரம் பேரூராட்சி செயல் அலுவலர் மீது நடவடிக்கை எடுக்குமாறும், மனைப்பிரிவில் சட்டவிரோதமாக ஆக்கிரமிப்பு மூலம் கட்டப்பட்டுள்ள கட்டிடங்களை அகற்றி, பூங்கா, சாலைகளை மீட்டு திரும்பப்பெற ஆணை பிறப்பிக்குமாறு இம்முறைமன்ற நடுவத்தில் புகார் மனு அளித்துள்ளார்.

2. மனுதாரரின் புகார் மனு குறித்து திருநாகேஸ்வரம் பேரூராட்சி செயல் அலுவலரது விளக்க அறிக்கை கோரப்பட்டது. திருநாகேஸ்வரம் பேரூராட்சி செயல் அலுவலரது 21.3.2017 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் கோரிக்கை விவரம் ஒவ்வொன்றுக்கும் கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்:-

<u>கோரிக்கை எண்.1</u>: மோசடி வரைபடத்தின் மனை எண்கள்.13,14,15,22,23, 24 மீது அமையப்பெற்ற குடியிருப்பு மனைப் பகுதியில் இயங்கிவரும் H.P பெட்ரோல் பங்க் அங்கீகாரத்தை ரத்து செய்து உத்தரவிடவேண்டும் என மனுதாரரால் கோரிக்கை எழுப்பப்பட்டுள்ளது. H.P பெட்ரோல் பங்க் அங்கீகாரம் ரத்து என்பது பேரூராட்சி நிர்வாகத்திற்கு உட்பட்டதல்ல.

<u>கோரிக்கை எண்.2</u>: மோசடி வரைபடத்தின் மனை எண்.22ன் மேற்குப் பகுதியில் மேற்படி மனையின் உரிமைதாரர்கள் வடிவாய்க்காலையும் சேர்த்து தூர்த்து வணிக வளாகம் கட்டியுள்ளனர். இடத்தை மீட்டு வாய்க்காலை சீர்செய்ய வேண்டுமென மனுதாரரால் கோரிக்கை எழுப்பப்பட்டுள்ளது. மனுதாரர் புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ள வடிவாய்க்கால் ஆக்கிரமிப்பு பொதுப்பணித்துறை மூலம் சரிசெய்யப்படவேண்டும் என்பதால் சம்பந்தப்பட்ட துறைக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

<u>கோரிக்கை எண்.3</u>: மோசடி தொழில்நுட்ப வரைபட ஒப்புதல் குடியிருப்பு மனைப் பிரிவு மூலம் மனை எண்கள்.18, 19,27,28 ஆகிய மனைப்பிரிவில் சுமார் 700 சதுர மீட்டர் அளவிற்குமேல் பிரமாண்டமான ஒப்பிலி ரெசிடென்சி (இரண்டுமாடிக் கட்டிடம்) தங்கும் விடுதி எந்தவிதமான அனுமதியும் இன்றி கடந்த 8.3.2015 முதல் இயங்கி வருகிறது. இதற்கு நகர் ஊரமைப்புத் துறை, தஞ்சாவூர் மற்றும் பேரூராட்சி அலுவலகம், திருநாகேஸ்வரம் மற்றும் கட்டிடம் அமைந்துள்ள 12வது வார்டு உறுப்பினரும், இடத்தை விற்பனை செய்த டி. சுந்தரமூர்த்தி என்பவரும் மேற்படி விடுதி இயங்க உறுதுணையாக இருப்பது தெரிய வருகிறது. மாவட்ட ஆட்சியர் அவர்களின் எச்சரிக்கையை எந்தவிதத்திலும் கண்டுகொள்ள வில்லை.

ஒப்பிலி ரெசிடன்சி கட்டிட அனுமதியானது பேரூராட்சியால் வணிக நோக்கிலான கட்டிட அனுமதிக்கு வழங்கக்கூடிய 2000 சதுர அடிக்குள் இருந்ததால் முன்னாள் செயல் அலுவலர் திரு. சீ. ராம்பிரசாத் என்பவரால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஆனால், அதன் உரிமையாளரால் தற்போது தரைத் தளம், முதல் தளம் மற்றும் இரண்டாம் தளம் என கட்டப்பட்டு சுமார் 11,800 சதுர அடிக்கு தங்கும் விடுதியாக கட்டப்பட்டுள்ளது. இதற்கு பேரூராட்சியால் கட்டிட அனுமதி வழங்க இயலாது என்பதால், உரிமையாளிடம் புதிய வரைபடம் மற்றும் ஆவண நகல்களைப் பெற்று துணை இயக்குநர், நகர் ஊரமைப்பு, தஞ்சாவூர் அலுவலகத்திற்கு மேல் நடவடிக்கைக்காக அனுப்பப்பட்டுள்ளது.

<u>கோரிக்கை எண்.4</u>: மோசடி வரைபடத்தின் மனை எண்.29, 20ல் உயர்தர சைவ உணவகமான ஒப்பிலி பவன் கடந்த 08.03.2015 அன்று திறக்கப்பட்டு அதற்கு மட்டும் திருநாகேஸ்வரம் பேரூராட்சி அனுமதி அளித்துள்ளது தெரியவருகிறது. இதற்கு உணவகம் அமைந்துள்ள 12–வது வார்டு உறுப்பினரும், இந்த இடத்தை விற்பனை செய்தவருமான திரு. டி. சுந்தரமூர்த்தி ஆதரவாக செயல்பட்டது தெரியவருகிறது. மேற்படி இடம் குடியிருப்பு மனைப் பகுதி என்று தெரிந்தும், தற்போதைய பேரூராட்சி செயல் அலுவலர் திரு. இரா. நந்தகுமார் அவர்கள் சட்டத்தை மீறி அனுமதி அளித்துள்ளது குறித்து மாவட்ட நிர்வாகம் விசாரணை செய்து கடுமையான நடவடிக்கை எடுக்குமாறு மனுதாரரால் கோரப்பட்டுள்ளது.

சைவ உணவகமான ஒப்பிலிபவன் என்பது திருமதி. சௌமியா பெயரில் வீடுகட்ட 24.01.2013ல் 4000 சதுர அடிக்கு அப்போதைய செயல் அலுவலர் திரு. கமலக்கண்ணன் என்பவரால் கட்டிடம் கட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஆனால், அதன் உரிமையாளர் 1690 சதுர அடியில் மட்டுமே வணிக நோக்கிலான ஒப்பிலிபவன் சைவ உணவகம் கட்டி முடித்துள்ளார். எனவே, பேரூராட்சியின் வருவாயை ஈடுசெய்யும் பொருட்டு அந்த கட்டிடத்திற்கு புதிய வரைபடம் வரையப்பெற்று வணிக நோக்கிலான கட்டிட அனுமதிக்குண்டான தொகையை வசூலித்து, கட்டி முடிக்கப்பட்ட கட்டிடம் என்பதால் 27.4.2015இல் வணிக கட்டிடத்திற்கான வரிவிதிப்பு செய்யப்பட்டுள்ளது.

<u>கோரிக்கை எண்.5</u>: மோசடியாக ஆவணம் தயார் செய்த நில உரிமையாளர்கள் மீது நடவடிக்கை எடுத்தும், அவர்கள், மோசடி மனை எண்கள்.17,16,25,26 ஆகியவற்றில் முறைகேடாக வணிக வளாகம் கட்டியுள்ளார்கள். அதற்கான பேரூராட்சி அனுமதியை ரத்து செய்து உத்தரவிடவேண்டுமென மனுதாரர் கோரியுள்ளார்.

தங்கவேல் மனைப் பிரிவுக்கு 2003ம் ஆண்டு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. நகர் ஊரமைப்பு சென்னை சிறப்பு ஆணையரின் தொழில்நுட்ப வரைபடம் அனுமதி மாற்றப்பட்டு, அப்போதைய செயல் அலுவலர் திரு. பாலகிருஷ்ணன் அவர்களால் அனுமதிக்கப்பட்டுள்ள மனைப்பிரிவு வரைபடம் ஒன்று உள்ளது. தொழில்நுட்ப வரைபட அனுமதி மாற்றப்பட்டுள்ளதற்கு உண்டான எவ்வித கோப்புகளும் பதிவுகளும், தகவல்களும் தங்கவேல் மனைப்பிரிவு கோப்பில் இல்லை. செயல் அலுவலரால் அனுமதி வழங்கப்பட்ட வரைபடத்தில் உள்ளவாறுதான் பூங்கா, சாலைகள் அனைத்தும் தானமாக திருவிடைமருதூர் சார் பதிவு அலுவலகம் மூலம் பேரூராட்சிக்கு கிடைக்கப்பெற்றுள்ளது. அந்த வரைபடத்தில் உள்ள மனை எண்கள் கொண்டே அனைத்து மனைகளும் விற்பனையாகி பதிவாகியுள்ளன.

<u>கோரிக்கை எண்.6</u>: திருநாகேஸ்வரம் பேரூராட்சியில் 12வது வார்டு உறுப்பினர் டி. சுந்தரமூர்த்தி அவர்கள் மோசடி ஆவணம் தயார் செய்த காரணத்தினால் அவரை பேரூராட்சி மன்ற உறுப்பினர் பதவியிருந்து நீக்க உள்ளாட்சி நிர்வாகம் மற்றும் மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க மனுதாரர் வேண்டியுள்ளார்.

மனுதாரர் குறிப்பிடும் 12வது வார்டு உறுப்பினரின் பதவிக்காலம் கடந்த 25.10.2016ஆம் தேதியுடன் முடிவடைந்துவிட்டது. உள்ளாட்சிமன்ற தேர்தல் நடைபெறாததால் தற்சமயம் மேற்படி வார்டு உறுப்பினர் பதவியிடம் காலியாக உள்ளது.

<u>கோரிக்கை எண்.7</u>: நகர் ஊரமைப்புத் துறை, சென்னை மூலம் வழங்கப்பட்ட தொழில்நுட்ப வரைபடத்தை மோசடியாக மாற்றி நிலம் (மனை) விற்பனை செய்த நில உரிமையாளர்கள் மீது பேரூராட்சிக்கு எழுதிக்கொடுத்த தான பத்திரத்தில் குறிப்பிட்டுள்ளபடி வில்லங்கம் இருந்தால் இதர சொத்தினை கட்டுப்படுத்தி தீர்த்துவைப்பதாக உறுதி அளித்துள்ளபடி கடும் நடவடிக்கை எடுக்குமாறு மனுதாரரால் கோரப்பட்டுள்ளது.

கோரிக்கை எண்.5க்கு அளிக்கப்பட்டுள்ள பதில் இதற்கும் பொருந்தும்.

<u>கோரிக்கை எண்.8</u>: நகர் ஊரமைப்புத் துறை, சென்னை மூலம் வழங்கப்பட்ட தொழில்நுட்ப வரைபடத்தை மோசடியாக மாற்றியதன் மூலம் சுமார் 350 சதுர மீட்டர் (4000 சதுர அடி) நிலங்கள் அபகரிக்கப்பட்டு மனைப் பிரிவுகளாக விற்கப்பட்டுள்ளன. மேற்படி அரசு நிலங்களை மீட்க நடவடிக்கை எடுக்குமாறு மனுதாரர் கோரிக்கை விடுத்துள்ளார்.

கோரிக்கை எண்.5க்கு அளிக்கப்பட்டுள்ள பதில் இதற்கும் பொருந்துமென திருநாகேஸ்வரம் பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்துள்ளார்.

3. திருநாகேஸ்வரம் பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் முறையீட்டு மனுதாரர் ஆகியோர் 10.05.2017 அன்று நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு இம்முறைமன்ற நடுவத்தால் 24.03.2017 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன. முறையீட்டு மனுதாரர் திரு. அ.சி. முத்தரசு மற்றும் திருநாகேஸ்வரம் பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோர் 10.5.2017 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு வாக்குமூலம் அளித்துள்ளனர்:-

4. மனுதாரர் திரு. அ.சி. முத்தரசு இம்முறைமன்ற நடுவத்தில் 10.5.2017 அன்று நடைபெற்ற நேரடி விசாரணையில் ஆஜராகி அளித்துள்ள வாக்குமூலத்தில் "4.5.2016 நாளிட்ட மனு என்னால் அனுப்பப்பட்டது. ந.க.எண்.1533 திருநாகேஸ்வரம் பேரூராட்சியில் கும்பகோணம்–காரைக்கால் சாலையில் தங்கவேல் நகர் என்ற மனைப்பிரிவு உருவானது. மனைப்பிரிவு ஒப்புதல் நகர் ஊரமைப்பு இயக்குநர் ந.க.எண்.7738/2002/LA1/4.12.2002 334/2002-ன்படி ஒப்புதல் செய்யப்பட்டது. அதனுடைய நகல் 10.7.2015ல் வழங்கினார்கள். அதனுடைய நகலினை இத்துடன் சமர்ப்பித்துள்ளேன். அதற்குப் பின்பு பேரூராட்சியில் அந்த வரைபடத்தையே மாற்றி பூங்கா முன்னால் இருந்ததை மாற்றி, பின்னால் பெட்ரோல் பங்க், ரோடு, சாலை, பூங்கா போன்றவற்றை மாற்றம் செய்து, இவர்களாகவே ஒரு புதிய வரைபடத்தை உருவாக்கி, திருத்தப்பட்ட போலி வரைபடத்திற்கு பேரூராட்சியில் அங்கீகாரம் வாங்கிவிட்டார்கள். திருத்தப்பட்ட வரைபடத்தில் இனி புதிய கட்டிடத்திற்கு அனுமதி வழங்கக்கூடாது என நான் முந்தைய செயல் அலுவலர் திரு. நந்தகுமார் அவர்களிடம் இதுகுறித்து புகார் தெரிவித்தேன். திருத்திய போலியான வரைபடத்தை நகர் மற்றும் ஊரமைப்புத் துறைக்கு அனுப்பி ஏற்கனவே போலியாக தயார் செய்து ஒப்புதல் பெற அங்கீகாரத்திற்கு அனுப்பினார். ஆனால் நகர் மற்றும் ஊரமைப்புத் துறை இயக்ககத்தில் அங்கீகாரம் அளிக்கவில்லை. திருத்தப்பட்ட போலியான வரைபடத்தின் மூலம் நிறைய கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளன. இந்த இடத்தில் பெட்ரோல் பங்க் இருக்கிறது. சாலை இருக்கவேண்டிய இடத்தில் ஒப்பிலி ரெசிடன்சி என்ற தங்கும் விடுதி அனுமதி பெறாமல் இயங்கிவருகிறது. மேலும், ஒப்பிலி பவன் என்ற ஊேறாட்டல் உள்ளது. இதற்கு அங்கீகாரம் பேரூராட்சியால் வழங்கப்பட்டுள்ளது. எனவே, போலியாக தயார் செய்யப்பட்டு, ஒப்புதல் பெறப்பட்டு, அதன் மூலம் கட்டப்பட்ட கட்டிடங்களுக்கு சீல் வைக்கவேண்டும், கட்டிடங்களை அகற்றவும், பூங்கா மற்றும் சாலைகளை மீட்கவும் மற்றும் சம்மந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும்" என்று தெரிவித்துள்ளார்.

5. 10.5.2017 அன்றைய நேரடி விசாரணையில் திருநாகேஸ்வரம் பேரூராட்சி செயல் அலுவலர் திரு. இரா. இராஜா என்பவர் ஆஜராகி அளித்துள்ள தமது வாக்குமூலத்தில் "கடந்த 6 மாதங்களாக பேரூராட்சியினுடைய செயல் அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு வேலூர் மாவட்டத்தில் விலாபாக்கத்தில் பேரூராட்சி செயல் அலுவலராக பணிபுரிந்தேன். மனுதாரர் திரு. முத்தரசு என்பவருடைய மனு விவரம் எனக்குத் தெரியும். அவர் உள்ளாட்சி தேர்தல் சம்பந்தமாக என்னை காணவந்தார். மனு விஷயமாக என்னிடம் வந்து பேசவில்லை. மனுதாரர் மனுவில் கூறியிருக்கிற புகார்கள் உண்மைதான். திரு. பாலகிருஷ்ணன் (ஓய்வு பெற்று தற்பொழுது கும்பகோணத்தில் உள்ளார்) என்னும் செயல் அலுவலர் இதற்கு முழு பொறுப்பாவார். திரு. நந்தகுமார் நேரடியாக இதற்கு தொடர்பில்லை. காரணம் அசல் அங்கீகாரத்தை மாற்றி பேரூராட்சி ஒப்புதல் பெற்றபின்பு, ஒப்புதல் பெற்ற வகையில் அவர் கட்டிடம் கட்டுவதற்கு அனுமதி கொடுத்தார். திரு. நந்தகுமார் ஓய்வு பெற்றுவிட்டார் (தற்பொழுது வைதீஸ்வரன்கோவிலில் இருக்கிறார்). திரு. பாலகிருஷ்ணன் மற்றும் திரு. நந்தகுமார் ஆகியோரது முகவரி மற்றும் கைபேசி எண்களின் விவரத்தினை சமர்ப்பிக்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

6. திருநாகேஸ்வரம் பேரூராட்சி செயல் அலுவலரின் வாக்குமூலத்தின் அடிப்படையில், திருநாகேஸ்வரம் பேரூராட்சியில் செயல் அலுவலர்களாக பணிபுரிந்து ஓய்வுபெற்ற செயல் அலுவலர்கள் திரு. எம்.எஸ். பாலகிருஷ்ணன் மற்றும் திரு. இரா. நந்தகுமார் ஆகியோரை 22.6.2017 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகுமாறு பணித்து இம்முறைமன்ற நடுவ 20.5.2017 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன. ஓய்வுபெற்ற செயல் அலுவலர் திரு. எம்.எஸ். பாலகிருஷ்ணன் தமது 11.6.2017 நாளிட்ட கடிதத்தில் தமக்கு 8.7.2014ல் கேன்ஸர் அறுவை சிகிச்சை செய்யப்பட்டதென்றும், அது முதல் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருவதாகவும், மேற்கொண்டு மேற்கொள்ளப்பட்ட மருத்துவ பரிசோதனையின்படி மீண்டும் அறுவை சிகிச்சை செய்யவேண்டுமென மருத்துவமனையில் தேதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதென்றும் எனவே, தம்மால் 22.6.2017 அன்று நேரில் ஆஜராக இயலாது என்று தெரிவித்து, தமது மருத்துவ சிகிச்சைக்கான சான்றுகளையும் சமர்ப்பித்துள்ளார்.

7. திரு. இரா. நந்தகுமார், திருநாகேஸ்வரம் பேரூராட்சி முன்னாள் செயல் அலுவலர் (ஓய்வு) 22.6.2017 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி அளித்துள்ள தமது வாக்குமூலத்தில் "தஞ்சாவூர் மாவட்டம், திருநாகேஸ்வரம் பேரூராட்சியில் மனுதாரர் குறிப்பிட்டுள்ள இந்த இடம் 10 ஆண்டுகளுக்கு முன்பு முறையீட்டு மனுவில் குறிப்பிடப்பட்ட தரைதளம், முதல் தளம் மற்றும் இரண்டாம் தளத்திற்கு நான் எந்தவித அனுமதியும் கொடுக்கவில்லை. நான் பொறுப்பில் வருவதற்கு முன்பே கட்டிடம் கட்டி முடியும் தருவாயில் இருந்தது. நான் சம்பந்தப்பட்ட நில உரிமையாளருக்கு அறிவிப்பு அனுப்பி முன்மொழிவு பெற்றும், நகர்புற ஊரமைப்புத் துறை, தஞ்சாவூருக்கு அனுப்பிவைத்தேன். அவர்களுக்கு நான் பதில் அனுப்பினேன். நான் பணியில் ஓய்வு பெற்றேன். நான் வரி விதித்ததாக சொல்லப்படும் கட்டிடம் ஏற்கனவே குடியிருக்கும் வீடு என வரைபட ஒப்புதல் வாங்கியிருந்த நிலையில், மேற்படி உரிமையாளர் வீட்டிற்கு வரி விதிப்பு செய்யக்கோரியதைத் தொடர்ந்து அக்குடியிருப்பை ஆய்வுசெய்த நிலையில், குடியிருப்பில் உணவகம் செயல்பட்டு வந்ததால், இக்கட்டிடத்தை வணிக ரீதியிலான கட்டிடமாக வரைபடத்தை மாற்றி அளிக்கக் கோரியதை தொடர்ந்து, வீட்டின் உரிமையாளர் மாற்றிக்கொடுத்ததையடுத்து, இக்கட்டிடத்திற்கு வணிக ரீதியிலான கட்டிட அனுமதியும், வரிவிதிப்பும் என்னால் செய்யப்பட்டது. மேற்படி உணவகம் இயங்கும் கட்டிடத்திற்கு தோராயமாக 2000 சதுர அடிக்குள் இருந்ததால் பேரூராட்சி செயல் அலுவலரின் வரம்பிற்குட்பட்டு கட்டப்பட்டிருந்ததால் இதற்கு வரிவிதிப்பு என்னால் செய்யப்பட்டது. மேற்படி கட்டிடம் லாட்ஜ் உரிமையாளரின் மனைவி பெயரில் உள்ளது. மனுதாரர் இதுபோன்ற புகார் மனுக்களை அனுப்பி பணம் பெறுவது வாடிக்கையாக உள்ளார்" என்று தெரிவித்துள்ளார்.

8. திருநாகேஸ்வரம் பேரூராட்சியின் முன்னாள் செயல் அலுவலர் திரு. எம்.எஸ். பாலகிருஷ்ணன் (ஓய்வு) தமது உடல்நிலையைக் கருதி தம்மால் நேரடி விசாரணையில் ஆஜராவதிலிருந்து விலக்களிக்குமாறு கேட்டுக்கொண்டதை ஏற்று, மனுதாரரின் புகார் மனுவின் நகலினை அவருக்கு அனுப்பிவைத்து, அதன் மீது அவருடைய எழுத்துபூர்வமான விளக்க அறிக்கையினை ஒருவார காலத்திற்குள் அனுப்பிவைத்திடுமாறு இம்முறைமன்ற நடுவ 27.6.2017 நாளிட்ட கடிதத்தில் கேட்டுக்கொள்ளப்பட்டார். அதன் அடிப்படையில்,

திரு. எம்.எஸ். பாலகிருஷ்ணன், செயல் அலுவலர் (ஓய்வு) தமது 10.7.2017 நாளிட்ட கடிதம் மூலம் அனுப்பியுள்ள விளக்க அறிக்கையில், திருநாகேஸ்வரம் பேரூராட்சிப் பகுதியில் தொடர்புள்ள வீட்டுமனைப்பிரிவுகள் அமைக்கப்பட்டு, பதிமூன்று ஆண்டுகளுக்கு மேலாகிறது. அப்போது பேரூரராட்சியில் பணிபுரிந்த எழுத்தர் மற்றும் பொறுப்பான பணியாளர்கள் எவரும் தற்போது பேரூராட்சியில் பணியில் இல்லை. அமைக்கப்பட்ட மனைப் பிரிவுகளில், மனைகள், சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டு விற்பனை செய்யப்பட்டுள்ளன. மனைகளை வாங்கிய நபர்கள் பேரூராட்சி அலுவலகத்தில் கட்டிட அனுமதி பெற்று, வீடுகள் அமைத்து, குடியேறி வசித்துவருகிறார்கள். கட்டப்பட்டுள்ள வீடுகளுக்கு சொத்துவரி விதித்து, வசூல் செய்யப்பட்டு வருவதாக தற்போதுள்ள செயல் அலுவலரும், பணியாளர்களும் தெரிவித்தனர். இதனால் இப்பேரூராட்சிக்கு வருவாய் இழப்பு ஏதுமில்லை எனவும் செயல் அலுவலர் தெரிவித்தார். விதிமுறைகளுக்குட்பட்டு அனைத்து வரி விதிப்புகளும் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். மனுதாரர் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்கீழ் செயல் அலுவலரிடம் விளக்கம் கேட்டதாகவும், இரண்டுமுறை விளக்கம் அளித்துள்ளதாகவும், ஓய்வுபெற்ற செயல் அலுவலர் திரு. நந்தகுமார் என்பவர் தெரிவிக்கிறார். மனுதாரர் அலுவலகத்திற்கு வந்து உட்கார்ந்துகொண்டு, தேவையற்ற வீணான பிரச்சனைகளை கிளப்பிவிட்டு ஏதேனும் ஆதாயம் கிடைக்கும் என்ற நோக்கத்தில் இதையெல்லாம் செய்கிறார் என பணியாளர்கள் தெரிவிக்கின்றனர். ஆதாயம் இல்லை என்று தெரிந்தால் மொட்டை பெட்டிஷன் போடப்போவதாக தெரிவித்து மிரட்டுவது போன்ற செயல்கள்தான் நடந்துவருகிறது என ஓய்வுபெற்ற செயல் அலுவலர்கள் கூறுகின்றனர். மனைப்பிரிவு அமைத்தவரிடம், அடிக்கடி பணம் கேட்டும், அவர் கேட்ட தொகையை கொடுக்காததால், வீணான சம்மந்தமே இல்லாமல் மனு கொடுத்து, வீண் வதந்திகளை பரப்புகிறார். மனுதாரருக்கும், மனைப்பிரிவு அமைத்தவருக்கும் இடையே மனஸ்தாபம் ஏற்பட்டு, ஆதாயம் ஏதுமில்லை என தெரிந்தவுடன், இதுமாதிரி ஏதேனும் பிரச்சனையை கிளப்பிவிடலாம் என நினைத்து மனு கொடுக்கப்பட்டுள்ளது. நான் பணி ஓய்வு பெற்று பத்து ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டது. உடல்நலம் பாதிக்கப்பட்டு, அறுவை சிகிச்சை செய்து, மிகவும் சிரமமான சூழ்நிலையில் இருந்துவருகிறேன். மனுதாரர், ஏதேனும் ஆதாயம் கிடைக்கும் என்ற எண்ணத்தில்தான் மனு கொடுத்து, வீண் பிரச்சனைகளை உண்டாக்குகிறார் என ஓய்வுபெற்ற செயல் அலுவலர்கள், தற்போதைய அலுவலர்கள் தெரிவிக்கின்றார்கள். இதைத் தவிர வேறு பிரச்சனைகள் ஏதுமில்லை என்று தெரிவித்துள்ளார்.

9. இதனையடுத்து 3.10.2017 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகுமாறு ஓய்வுபெற்ற செயல் அலுவலர் திரு. எம்.எஸ். பாலகிருஷ்ணன் அவர்களுக்கு 10.8.2017 நாளிட்ட அழைப்பாணை அனுப்பப்பட்டது. தமக்கு மேற்கொள்ளப்பட்ட அறுவை சிகிச்சை முடிந்து தையல் பிரிக்கப்படாத நிலையில் இருந்துவருவதால், தம்மால் நேரில் ஆஜராக இயலாது என்றும், மேலும் முன்னாள் செயல் அலுவலர் திரு. இரா. நந்தகுமார் என்பவரும் 15 தினங்களுக்கு முன்னர் மாரடைப்பு ஏற்பட்டு மரணமடைந்துவிட்டார் என குறிப்பிட்டும் தனது கைப்பட 30.8.2017ல் விளக்கம் அளித்துள்ளார்.

10. இதனிடையே, இம்முறைமன்ற நடுவத்தின் வேண்டுகோளின்படி தஞ்சாவூர் மாவட்டம், திருநாகேஸ்வரம் பேரூராட்சி புல எண்.30(ப) 31–1Aல் 2 ஏக்கர், 14 சென்ட் நிலம் மனைப்பிரிவுகளாக அமைத்து 2002ம் ஆண்டில் வழங்கப்பட்ட மனைப்பிரிவு அங்கீகாரம் மற்றும் 2003ல் திருத்தப்பட்ட மனைப்பிரிவுகள் குறித்த கோப்புகள் (ந.க.எண்.51/2002) தொடர்புடைய ஆவணங்களின் நகல்களை இம்முறைமன்ற நடுவத்திற்கு திருநாகேஸ்வரம் பேரூராட்சி செயல் அலுவலர் தமது கடிதம் ந.க.எண்.131/2015 நாள் 22.8.2017 மூலம் சமர்ப்பித்துள்ளார்.

11. இதனிடையே, மனுதாரர் அ.சி. முத்தரசு தனது 25.8.2017 நாளிட்ட கடிதத்தில் தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் வட்டம், திருநாகேஸ்வரம் பேரூராட்சியில், கும்பகோணம்–காரைக்கால் சாலையில் தங்கவேல் நகர் மனைப்பிரிவு போலி வரைபடத்தின்மூலம் உருவாக்கப்பட்டு, அது சம்மந்தமாக தன்னால் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு 4.5.2016 அன்று புகார் மனு அளிக்கப்பட்டு, 10.5.2017 அன்று முறைமன்ற நடுவத்தில் ஆஜராகி வாக்குமூலம் அளித்துள்ளதாகவும், தற்பொழுது மேற்படி புகார் மனு நிலுவையில் உள்ள நிலையில், போலி மனைப்பிரிவில் சில மனைகளுக்கு வீடு கட்ட திருநாகேஸ்வரம் பேரூராட்சியால் அனுமதி வழங்கியதாக தெரியவருவதாகவும், மேலும் கட்டிட அனுமதி பெறாமல் இயங்கிவரும் ஒப்பிலி ரெசிடென்சி தங்கும் விடுதியின் எதிர்புறம் சுமார் ஒருமாத காலமாக சிட்டி யூனியன் வங்கியின் ATM செயல்பட்டு வருகிறது என்றும், மேற்படி இடத்திற்கு தனியாக மின் இணைப்பும் கொடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். இதற்கு திருநாகேஸ்வரம் பேரூராட்சி நிர்வாகம் உறுதுணையாக இருப்பதும் தெரியவருதால், தனது புகார் மனு மீது தகுந்த உத்தரவுகளை பிறப்பிக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார். இது குறித்த புகைப்பட நகல்களையும் மனுதாரர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பித்துள்ளார்.

12. திருநாகேஸ்வரம் பேரூராட்சி செயல் அலுவலர் இம்முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பிவைத்துள்ள கடிதம் ந.க.எண்.131/2015 நாள் 07.09.2017ல் தஞ்சாவூர் மாவட்டம், திருநாகேஸ்வரம் பேரூராட்சி, திருநாகேஸ்வரம் புல எண்.30(ப), 31–1A, 2ல் 2 ஏக்கர் 14 சென்ட் நிலம் 29 மனையாக பிரிக்கப்பட்டு மனைப்பிரிவு அமைத்து 2002–ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட மனைப்பிரிவு அங்கீகாரம் மற்றும் 2002–ஆம் ஆண்டில் திருத்தப்பட்ட மனைப்பிரிவுகள் குறித்த கோப்புகள் மற்றும் ஆவணங்கள் ஆகியவை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டன என்றும், மேற்படி கடிதத்தில் 2002–ஆம் ஆண்டு திருத்தப்பட்ட மனைப்பிரிவுகள் என்பதற்கு பதிலாக 2006–இல் திருத்தப்பட்ட மனைப்பிரிவுகள் என தவறுதலாக குறிப்பிடப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார். மேலும், புல எண்.30(ப), 31–1A, 2இல் 2 ஏக்கர் 14 சென்டில் 29 மனைகளுக்கு நகர் ஊரமைப்புத் துறை சிறப்பு ஆணையர் அவர்களால் 04.12.2002–இல் தொழில்நுட்ப அனுமதி (Technical Sanction) வழங்கப்பட்டு, அதன் அடிப்படையில் திருநாகேஸ்வரம் பேரூராட்சி மன்றத் தீர்மானம் எண்.203 நாள் 29.5.2003ல் மனைப்பிரிவு அங்கீகரித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதாகவும், நகர் ஊரமைப்புத் துறை சிறப்பு ஆணையரால் தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்ட வரைபடத்தை அப்போதைய செயல்

அலுவலர் திரு. எஸ். பாலகிருஷ்ணன் என்பவர் நகர் ஊரமைப்புத் துறை சிறப்பு ஆணையரின் எழுத்துப்பூர்வமான ஆணை மற்றும் மாறுதல் வரைபடம் அனுமதியின்றி தன்னிச்சையாக 30 அடி சாலையினை 23 அடி சாலையாக மாற்றியும், முன்புறம் ஒதுக்கீடு செய்யப்பட்ட பூங்காவிற்கான இடத்தை பின்புறம் மாற்றி, மேற்கண்ட மனைப்பிரிவிற்கு வரைபடம் தயார்செய்து, செயல் அலுவலரின் நடவடிக்கைகள் ந.க.எண்.51/2002 நாள் 30.05.2003–ன்படி மனைப்பிரிவு அங்கீகாரம் வழங்கியும், வரைபட ஒப்புதல் செய்தும் ஆணையிட்டுள்ளார். மேலும், மேற்படி வரைபடத்தில் திருத்தம் செய்யப்பட்டமைக்கான காரணங்கள் குறித்து சம்மந்தப்பட்ட கோப்புகளில் குறிப்புகள் ஏதும் சம்மந்தப்பட்ட செயல் அலுவலரால் ஏதும் எழுதப்படவில்லை என்ற விவரத்தையும் தெரிவித்துள்ளார்.

13. திருநாகேஸ்வரம் பேரூராட்சி செயல் அலுவலரின் மேற்கண்ட அறிக்கையின் அடிப்படையில், நகர் ஊரமைப்பு ஆணையாளரால் அனுமதிக்கப்பட்ட மனைப்பிரிவு பின்னர் எந்த அடிப்படையில் திருத்தப்பட்டது? ஏற்கனவே நகர் ஊரமைப்பு ஆணையரால் அனுமதிக்கப்பட்ட மனைகள் மற்றும் பொது இடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளனவா? திறந்தவெளி இடங்கள், பூங்கா நிலங்கள் நகர் ஊரமைப்பு ஆணையாளரின் ஆணைப்படி பேரூராட்சியால் தானம் பெறப்பட்டுள்ளதா, மனைகள் யாவும் நகர் ஊரமைப்புத்துறை ஆணையாளரால் அனுமதித்துள்ள அளவுகளின்படி உள்ளனவா? இதனால் பேரூராட்சிக்கு ஏற்பட்டுள்ள இழப்பீடு/முறைகேடுகள் விவரம், மதிப்பீடு, மனை உரிமையாளர் பெற்றுள்ள பயன்கள் போன்ற விவரங்களை பேரூராட்சி அலுவலக ஆவணங்களின் அடிப்டையிலும், தல ஆய்வு மேற்கொண்டும் பரிசீலித்து பிரத்யேக அறிக்கையினை 15 தினங்களுக்குள் இம்முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பிவைத்திடுமாறு, தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவச் சட்டம் 2014, விதி 6(4) (a)யின்படி பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், தஞ்சாவூர் அவர்களை அறிவுறுத்தி 14.09.2017ல் இம்முறைமன்ற நடுவத்தினால் ஆணையிடப்பட்டது.

14. பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், தஞ்சாவூர் மண்டலம், தஞ்சாவூர் அவர்களது 5.8.2019 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்ட விவரங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன:-

தஞ்சாவூர் மாவட்டம், திருநாகேஸ்வரம் பேரூராட்சி வார்டு எண்.12, புல எண்.30 (பகுதி) மற்றும் 31–1Aல் 2.14 ஏக்கர் அளவுள்ள இடத்தில் திரு. குமார், த/பெ தங்கவேல் என்பவர் 93,219 சதுர அடியில் 29 மனைகளும், 9473 சதுர அடியில் பூங்காவிற்கான திறவையிடமும் மற்றும் சாலை பயன்பாட்டிற்கு 17,549.5 சதுர அடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டு, மனைப்பிரிவு அமைத்திட சென்னை நகர் ஊரமைப்பு சிறப்பு ஆணையரால் ம.வ/ந.ஊ.இ.எண்.334/2002 நாள் 04.12.2002 ஆணையின்படி, மனைப்பிரிவு வரைபடம் அங்கீகாரம் மற்றும் தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. மேற்காணும் மனைப்பிரிவுக்கு திருநாகேஸ்வரம் பேரூராட்சி மன்ற சாதாரணக் கூட்ட தீர்மானம் எண்.203 நாள் 29.5.2003ல் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

மேற்காணும் தங்கவேல் நகர் மனைப்பிரிவு, சென்னை நகர் ஊரமைப்பு சிறப்பு ஆணையரால் தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்ட வரைபடத்தில் பூங்காவிற்காக

ஒதுக்கப்பட்ட கும்பகோணம் சாலையினை ஒட்டியுள்ள 4140 சதுர அடி இடத்தினை, மனை எண்.1க்கு மாறுதல் செய்தும், மேற்படி பூங்கா இடத்தினை மனையாகவும் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. மேலும் கிழமேல் 30 அடி அகலம் உள்ள சாலையினை 23 அடி சாலையாக மாற்றம் செய்து வேறு மனைப்பிரிவு வரைபடம் தயார் செய்து, அன்றைய தேதியில் செயல் அலுவலராக பணிபுரிந்துவந்த திரு. எஸ். பாலகிருஷ்ணன் என்பவரால் செயல்முறைகள் ந.க.எண்.51/2002 நாள் 30.5.2003இன்படி திருத்திய மனைப்பிரிவு வரைபடம் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

திருத்தப்பட்ட வரைபடத்தில் கண்டுள்ள விவரங்களின்படியே பூங்காவிற்காக ஒதுக்கப்பட்ட இடங்கள் மற்றும் சாலைகள் அனைத்தும் மனைப்பிரிவு உரிமையாளர்களால் 29.5.2003 அன்று திருவிடைமருதூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் தானப்பத்திரம் மூலம் பேரூராட்சி பெயருக்கு பதிவு செய்யப்பட்டு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மேற்படி மனைப்பிரிவினை தல ஆய்வு செய்ததில், அப்போதைய செயல் அலுவலரால் மாற்றம் செய்யப்பட்ட மனைப்பிரிவுகள் தற்போது நடைமுறையில் உள்ளது. சென்னை நகர் ஊரமைப்பு சிறப்பு ஆணையரால் தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்ட வரைபடத்தில் உள்ள பூங்கா இடத்தில் மனை எண்.22இல் 4140 சதுர அடி இடத்தில், தற்போது பெட்ரோல் பங்க் அமைக்கப்பட்டு, மேற்கண்ட மனைப்பிரிவு உரிமையாளர் திரு. டி. குமார் என்பவரால் நடத்தப்பட்டு வருகிறது.

மேலும், கிழமேல் 30 அடி சாலையினை 23 அடியாக மாற்றம் செய்யப்பட்டதில் உள்ள 7 அடியினை திருத்தப்பட்ட வரைபடத்தில் கண்டுள்ள மனை எண்கள்.13 முதல் 20 வரை உள்ள மனைகளின் நீளத்தில் இரண்டு அடியும், மனை எண்கள் 22 முதல் 29 வரை உள்ள மனைகளின் நீளத்தில் 5 அடியும் சேர்த்து வரைபடத்தினை மாற்றம் செய்துள்ளார். மேற்படி மனைப்பிரிவுகளில் உள்ள 29 மனைகளில் 20 மனைகளுக்கு பேரூராட்சியின் கட்டிட வரைபடம் அனுமதி பெற்று கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளன. 9 மனைகள் மட்டுமே கட்டடங்கள் ஏதும் கட்டப்படாமல் காலிமனைகளாக உள்ளன.

நகர் ஊரமைப்புத் துறையினால் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபடத்தினை முறைகேடாக மாற்றி, திருத்தி ஒப்புதல் அளித்த திருநாகேஸ்வரம் பேரூராட்சியின் முன்னாள் செயல் அலுவலர் (ஓய்வு) திரு. எஸ். பாலகிருஷ்ணன் என்பவர் 08.06.2019 அன்று இறந்துவிட்டதாகவும், அவரது இறப்புச் சான்றதழ் நகலினையும் இம்முறைமன்ற நடுவத்திற்கு தமது அறிக்கையுடன் தஞ்சாவூர் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அனுப்பிவைத்துள்ளார்.

15. பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், தஞ்சாவூர் மண்டலம், தஞ்சாவூர் அவர்கள் சமர்பித்த அறிக்கையில் தெரிவித்துள்ளவாறு, மேற்படி மனைப்பிரிவின் பொதுத் திறவிடங்களை 29.5.2003 அன்று திருவிடைமருதூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் பேரூராட்சி பெயருக்கு பதிவு செய்து மனைப்பிரிவு உரிமைதாரரால் கொடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ள அப்பத்திரத்தில் நகர் ஊரமைப்புத் துறை சிறப்பு ஆணையரால்

அனுமதிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபட அங்கீகாரத்தின்படி பூங்கா மற்றும் சாலை ஆகிய பொதுப்பயன்பாட்டு இடங்கள், உரிய அளவீடுகள் பதிவு செய்து வழங்கப்படவில்லை என்பது புலனான நிலையில், தன்னிச்சையாக முன்னாள் பேரூராட்சி செயல் அலுவலரால் திருத்தப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தின்படி விற்கப்பட்ட மனைகளில் கிழமேல் 30 அடி சாலையினை 23 அடியாக திருத்தப்பட்ட வகையில் மனை எண்கள்.13 முதல் 20 வரை உள்ள மனைகளில் நீளத்தில் சேர்க்கப்பட்டுள்ள 2 அடிக்கான மதிப்பீட்டுத் தொகை, மேற்படி மனைப்பிரிவில் பூங்காவிற்காக ஒதுக்கப்பட்ட 4,140 சதுர அடி (மனைப்பிரிவு உரிமைதாரரால் பெட்ரோல் பங்க் வைக்கப்பட்டுள்ள இடம்) இடத்திற்கான மதிப்பீட்டு விலை, மற்றும் நகர் ஊரமைப்புத் துறையால் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திற்கு முரணாக ஏற்படுத்தப்பட்டுள்ள மனைகளில் (மனை எண்கள்.13–20 மற்றும் மனை எண்கள்.22–29) இதுவரை கட்டப்பட்டுள்ள கட்டிடங்களின் எண்ணிக்கை அவற்றிற்கு பேரூராட்சி மூலம் கட்டிட அனுமதி வழங்கப்பட்ட காலம் மற்றும் அந்த காலங்களில் பணிபுரிந்துள்ள செயல் அலுவலர்களின் பெயர் மற்றும் விவரங்கள் ஆகிய அனைத்து விவரங்களுடனான விரிவான அறிக்கை மற்றும் சம்மந்தப்பட்ட அசல் கோப்புகளுடன் 13.09.2019 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகுமாறு மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், தஞ்சாவூர் மண்டலம் மற்றும் திருநாகேஸ்வரம் பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோர்களுக்கு 29.08.2019 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

16. இம்முறைமன்ற நடுவ அழைப்பாணையின் அடிப்படையிலும், திருநாகேஸ்வரம் பேரூராட்சி செயல் அலுவலரது 12.09.2019 நாளிட்ட அறிக்கையின் அடிப்படையிலும், பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், தஞ்சாவூர் மண்டலம் அவர்களால் அனுப்பப்பட்ட 12.09.2019 நாளிட்ட அறிக்கையில் பின்வரும் விவரங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன:-

(i) தஞ்சாவூர் மாவட்டம், திருநாகேஸ்வரம் பேரூராட்சியில் புல எண்.30 மற்றும் 31/1A-க்கு அரசால் நிர்ணயம் செய்யப்பட்ட அன்றைய தேதியிலான சந்தை வழிகாட்டி மதிப்பு சதுரடி ஒன்றுக்கு ரூ.502/– (ரூபாய் ஐநூற்று இரண்டு மட்டும்) ஆகும். இதற்கான பதிவுத்துறை அலுவலகத்தின் இணையதள TP3 – Rc.No.2412-2017 பதிவிறக்கம் செய்யப்பட்டது.

(ii) திருத்தப்பட்ட மனைப்பிரிவு மனை எண்கள்.13 முதல் 20 வரை உள்ள மனைகளில் நீளத்தில் சேர்க்கப்பட்டுள்ள 2 அடிக்கான மதிப்பீட்டுத் தொகை 1045 சதுர அடிக்கு ரூ.5,24,590/– (ரூபாய் ஐந்து லட்சத்து இருபத்திநான்காயிரத்து ஐநூற்று தொன்னூறு மட்டும்) ஆகும்.

(iii) மனை எண்கள்.22 முதல் 29 வரை நீளத்தில் சேர்க்கப்பட்டுள்ள 5 அடிக்கான மதிப்பீட்டுத் தொகை 1400 சதுர அடிக்கு ரூ.7,02,800/– (ரூபாய் ஏழு லட்சத்து இரண்டாயிரத்து எண்ணூறு மட்டும்) ஆகும்.

(iv) மேற்படி மனைப்பிரிவில் பூங்காவிற்காக ஒதுக்கப்பட்ட 4140 சதுர அடிக்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.20,78,280/– (ரூபாய் இருபது லட்சத்து எழுபத்தெட்டாயிரத்து இருநூற்று எண்பது மட்டும்) ஆகும்

(v) மனை எண்கள் 13,14,15,22,23,24 ஆகிய மனைப்பிரிவுகளுக்கு 31.5.2004இல் முன்னாள் செயல் அலுவலர் திரு. திரு. ஏ.பி மோகன் குமார் என்பவரால் கட்டிட

அனுமதி வழங்கப்பட்டு, மனையின் உரிமையாளர் திரு. டி. குமார் என்பவரால் பெட்ரோல் பங்க் கட்டிடம் கட்டப்பட்டுள்ளது.

(vi) மனை எண்கள் 18,19,27,28 ஆகிய மனைப்பிரிவுகளுக்கு 29.7.2012–இல் வல்லம் பேரூராட்சியில் செயல் அலுவலராக பணிபுரிந்துவரும் திரு. சீ. இராம்பிரசாத் என்பவரால் கட்டிட அனுமதி வழங்கப்பட்டு, மனையின் உரிமையாளர் திரு. ராஜன் என்பவரால் லாட்ஜ் கட்டப்பட்டுள்ளது

(vii) மனை எண்கள்.16,25 ஆகிய மனைப்பிரிவுகளுக்கு முன்னாள் செயல் அலுவலர் (லேட்) இரா. நந்தகுமார் என்பவரால் கட்டிட அனுமதி வழங்கப்பட்டு, மனையின் உரிமையாளர் டி. குமார் என்பவரால் ஆஸ்பெஸ்டாஸ் சீட் கூரை அமைத்து, வாகனங்கள் பழுதுநீக்கம் செய்யும் கடை செயல்பட்டு வருகிறது

(viii) மனை எண்.17,26 ஆகிய மனைகள் மட்டுமே கட்டடங்கள் ஏதும் கட்டப்படாமல் காலி மனைகளாக உள்ளன

மேலும் திருநாகேஸ்வரம் பேரூராட்சியின் முன்னாள் செயல் அலுவலர் (ஓய்வு) திரு. எஸ். பாலகிருஷ்ணன் என்பவர் 08.6.2019 அன்று இறந்துவிட்டார் என்று குறிப்பிட்டு, அவரது இறப்புச் சான்றின் நகலினையும் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், தஞ்சாவூர் மண்டலம் தமது அறிக்கையுடன் இம்முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பித்துள்ளார்.

17. திருநாகேஸ்வரம் பேரூராட்சி செயல் அலுவலரது 12.09.2019 நாளிட்ட அறிக்கையின்படி தஞ்சாவூர் மாவட்டம், திருநாகேஸ்வரம் பேரூராட்சி, தங்கவேல் நகர் புல எண்.31/1ல் உள்ள மனைப்பிரிவில், 13 முதல் 20 மற்றும் 22 முதல் 29 வரை உள்ள மனைகளில் கட்டப்பட்டுள்ள கட்டிடங்களின் எண்ணிக்கை, பேரூராட்சி மூலம் கட்டிட அனுமதி வழங்கப்பட்ட காலம் மற்றும் அந்த காலங்களில் பணிபுரிந்துள்ள செயல் அலுவலர்களின் பெயர் மற்றும் விவரங்கள் கீழ்க்கண்டவாறு தெளிவாக்கப்பட்டுள்ளன:-

| வ எண் | மனை எண்கள் | உரிமையாளர் பெயர் | கட்டிட அனுமதி வழங்கிய நாள் | அனுமதி வழங்கிய செயல் அலுவலர் பெயர் | கட்டிடத்தின் தன்மை |
|---|---|---|---|---|---|
| 1. | 13,14,15,22, 23,24 | T. குமார் | 31.5.2004 | A.P.மோகன்குமார் (30.09.2013ல் ஓய்வு) | H.P பெட்ரோல் பங்க் |
| 2. | 18,19,27,28 | ராஜன் | 29.7.2012 | சீ. இராம் பிரசாத் (தற்போது வல்லம் பேரூராட்சி செயல் அலுவலர்) | LODGE |
| 3. | 20, 29 | R. சௌமியா | 27.04.2015 | இரா. நந்தகுமார் (காலமாகிவிட்டார்) | HOTEL |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 4. | 16, 25 | T. குமார் | 20.06.2014 | இரா. நந்தகுமார் (காலமாகிவிட்டார்) | ஆஸ்பெட்டாஸ் சீட்கூரை அமைத்து வாகனங்கள் பழுது நீக்கம் செய்யும் கடை செயல்பட்டு வருகிறது |
| 5. | 17,26 | T. குமார் | -- | --- | காலிமனைகளாக உள்ளன |

18. இம்முறைமன்ற நடுவ 29.8.2019 நாளிட்ட அழைப்பாணையின் அடிப்படையில் 13.09.2019 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜரான பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் திரு. ப. குற்றாலிங்கம், தஞ்சாவூர் மண்டலம் மற்றும் திருநாகேஸ்வரம் பேரூராட்சியின் செயல் அலுவலராக பணிபுரிந்த திரு. இரா. இராஜா ஆகியோர் அளித்துள்ள வாக்குமூலங்களில் பின்வருமாறு தெரிவித்துள்ளனர்:-

19. தஞ்சாவூர் மண்டல உதவி இயக்குநர் 13.9.2019 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி அளித்துள்ள தமது வாக்குமூலத்தில் "முறையீட்டு மனு எண்.56/2019 மனு தொடர்பாக என்னால் ஏற்கனவே 5.8.2019ல் ஒரு விரிவான அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. தற்போது இன்றைய விசாரணையின்போது 12.9.2019 நாளிட்ட தொடர் அறிக்கை இன்று நேரடியாக சமர்ப்பிக்கப்பட்டது என தெரிவித்துக்கொள்கிறேன். அதில் முறைமன்ற நடுவத்தால் கேட்கப்பட்ட அனைத்து விவரங்களும் விரிவாக கொடுக்கப்பட்டன. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தை கடைசியாக திருத்தம் செய்த திரு. பாலகிருஷ்ணன், செயல் அலுவலர் 8.6.2019 அன்று காலமாகிவிட்டார். அவர் மீதான தணிக்கைத் தடைகள் அனைத்தும் ரத்து செய்யப்பட்டன. உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் விசாரணையில் இருக்கும் இந்த ஒரு முறையீட்டு மனு முடிவுறாத நிலையில் அவர் குடும்பம் எந்தவித ஓய்வு/இறப்பு பயன்கள் எதுவும் அடைய முடியாமல் சிரமப்படுகிறார்கள். அதுகுறித்தும் உரிய முடிவு எடுக்குமாறும் கேட்டுக்கொள்கிறேன். மனை விற்பனையாளர் திரு. குமார் மற்றும் முன்னாள் செயல் அலுவலர் திரு. எஸ். பாலகிருஷ்ணன் (காலமானவர்) ஆகிய இருவருமே பேரூராட்சிக்கு வழங்கப்பட்ட தான ஆவணத்தில் முறைகேடாக திருத்தப்பட்ட வரைபடத்தில் உள்ள அளவுகளின்படி தானம் செய்யும் ஆவணத்தை உருவாக்கியுள்ளார்கள். அப்படி இருவரும் சேர்ந்து உருவாக்கப்பட்ட ஆவணமே பதிவு செய்யப்பட்டு பேரூராட்சிக்கு தானப்பத்திரமான வழங்கப்பட்டுள்ளது. மனைப்பிரிவு விற்பனையாளர் முறைகேடான வரைபட திருத்தத்தில் உள்ளவாறு தான ஆவணத்திலும் கொண்டுவந்து தற்போது அவற்றை அனுபவிக்கும் பயனாளியாக உள்ளார் என தெரிவித்துக்கொள்கிறேன். எனவே முறைகேடாக திட்டமிட்ட திருத்தப்பட்ட வரைபடத்தின் மூலம் பெறப்பட்ட ஆதாயங்களை மனை விற்பனையாளர் திரு. T. குமார் அனுபவித்து வருகிறார்" என்று தெரிவித்துள்ளார்.

20. திருநாகேஸ்வரம் பேரூராட்சி செயல் அலுவலராக பணிபுரியும் திரு. இரா. இராஜா என்பவரும் தனது வாக்குமூலத்தில் முறையீட்டு மனு எண்.56/2019 சம்மந்தமாக ஏற்கனவே

என்னால் வாக்குமூலம் அளிக்கப்பட்டது. அதனுடைய தொடர்ச்சியாக இன்று நேரில் விவரங்கள் அடங்கிய ஒரு அறிக்கையினை சமர்ப்பித்துள்ளேன். அதில் ஏற்கனவே மனை எண்கள்.13,14,15,22,23, 24 ஆகியவற்றின் உரிமையாளர் திரு. T. குமார் என்பவர் அதில் Petrol Bunk வைத்துள்ளார். மனை எண்கள்.17,18,29, 27 ஆகியவற்றிற்கு திரு. ராஜன் என்பவர் உரிமையாளராக இருக்கிறார். அதில் தங்கும் விடுதி கட்டப்பட்டுள்ளது. மனை எண்.20 மற்றும் 29 திரு ராஜன் என்பவரின் மனைவி திருமதி. சௌமியா அவர்கள் உணவு விடுதி கட்டியுள்ளார். மனை எண்.16 மற்றும் 25ல் திரு.T. குமார் என்பவர் வாகனங்கள் பழுது நீக்கம் செய்யும் கடை அமைத்துள்ளார். மேற்படி திரு. குமார், மனை எண்கள்.17 மற்றும் 26 ஆகியவற்றை காலிமனைகளாக அவருடைய வசத்தில் வைத்துள்ளார். வழிகாட்டு மதிப்பின்படி மேலே குறிப்பிட்டுள்ள மனைகளின் மொத்த மதிப்பு சதுர அடி ஒன்றுக்கு ரூ.502/– வீதம் மொத்தம் ரூ.33,05,670/– ஆகும். இதில் 4130 சதுர அடி பூங்காவிற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.20,78,280/– மேற்படி வரைபடத்தில் அனுமதிக்கப்பட்ட ரோட்டோரத்தில் அங்கீகாரம் பெற்ற வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பூங்கா இடத்திற்கு பதில் வேறு இடம் மனைப்பிரிவின் பின் பக்கத்தில் சம்மந்தப்பட்டவரால் பேரூராட்சிக்கு தானமாக வழங்கப்பட்டுள்ளது. இதில் நகர் ஊரமைப்பு சிறப்பு ஆணையர் தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்ட வரைபடத்தில் உள்ள பூங்கா இடத்தில் மனைப் பிரிவு உரிமையாளர் 4140 சதுர அடிக்கு Petrol Bunk இருப்பதால், மேலும் கிழமேல் 30 அடி சாலையினை 23 அடியாக மாற்றம் செய்யப்பட்டதில் உள்ள வித்தியாச 7 அடியினை திருத்தப்பட்ட வரைபடத்தில் கண்டுள்ள மனை எண்கள் 13 முதல் 20 வரை மனைகளின் நீளத்தில் 2 அடியும் மனை எண்கள்.22 முதல் 29 வரையுள்ள மனைகளின் நீளத்தில் 5 அடியும் சேர்த்து வரைபடத்தினை மாற்றம் செய்துள்ளார். மேற்படி மனைப்பிரிவுகள் உள்ள 29 மனைகளில் 20 மனைகளுக்கு பேரூராட்சியின் மூலம் கட்டிட வரைபட அனுமதி பெற்று கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளன. இன்றைய தேதியில் 9 மனைகள் மட்டுமே கட்டிடம் ஏதும் கட்டப்படாமல் காலிமனையாக உள்ளது" என்று தெரிவித்துள்ளார்.

21. தங்கவேல் நகர் மனைப்பிரிவு வரைபடத்தில் அப்போதைய பேரூராட்சி செயல் அலுவலர் தன்னிச்சையாக முறைகேடாக திருத்தங்கள் மேற்கொண்ட மனைப்பிரிவு வரைபடத்தின்படி, தொடர்ந்த ஆவணங்களை முறையாக பரிசீலிக்காமல் மனைகளுக்கு கட்டிட அனுமதி வழங்கியதால், திரு. சி. ராம்பிரசாத், முன்னாள் செயல் அலுவலர், வல்லம் பேரூராட்சி மற்றும் திரு. ஏ.பி. மோகன்குமார், முன்னாள் செயல் அலுவலர் ஆகியோர் 19.11.2019 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகுமாறு இம்முறைமன்ற நடுவத்தின் 25.09.2019 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன. திரு. ஏ.பி. மோகன்குமார் தான் 20.11.2019 முதல் 26.11.2019 முடிய காசிப்பயணம் மேற்கொள்ள முன்பதிவு செய்துவிட்டபடியால் 19.11.2019 அன்று நேரடி விசாரணைக்கு வரஇயலாது என்றும், எனவே காலஅவகாசம் நீட்டித்து வழங்குமாறும் 3.10.2019 நாளிட்ட கடிதத்தில் கேட்டுக்கொண்டுள்ளார். அதன் அடிப்படையில், அவருக்கான விசாரணை நாள் 5.12.2019 என முடிவு செய்யப்பட்டு, அவருக்கான அழைப்பாணை 17.10.2019 அன்று அனுப்பிவைக்கப்பட்டது.

22. திரு. சீ. இராமபிரசாத், திருநாகேஸ்வரம் பேரூராட்சியின் முன்னாள் செயல் அலுவலர் 19.11.2019 நாளிட்ட நேரடி விசாரணையில் ஆஜராகி அளித்துள்ள தமது வாக்குமூலத்தில் "நான் தற்போது வல்லம் பேரூராட்சியில் செயல் அலுவலராக பணிபுரிகின்றேன். திருநாகேஸ்வரம் பேரூராட்சியில் 2012 ஏப்ரல் முதல் ஜுன் மாதம் வரை பணிபுரிந்தேன். அதற்குப் பின்பு நான் அங்கு பணிபுரியவில்லை என தெரிவித்துக்கொள்கிறேன். திருநாகேஸ்வரம் பேரூராட்சியில் தங்கவேல் நகர் மனைப் பிரிவு என்கின்ற பெயரில் T. குமார் என்பவரால் மனைப் பிரிவு போடப்பட்டது. அப்போது தங்கவேல் நகரில் கட்டிட அனுமதி வேண்டி வந்த மனுவில் எத்தனை மனுக்களுக்கு நான் ஒப்புதல் வழங்கினேன் என்ற விவரம் எனக்கு நினைவில் இல்லை. அங்கு பணிபுரியும்போது மேற்படி மனைப் பிரிவில் சில மனைகளில் கட்டிட அனுமதி கோரி விண்ணப்பித்ததன் திட்ட அனுமதி மற்றும் வரைபட அனுமதி ஆகியவைகளுக்கு அனுமதி அளித்தேன். இதுபோன்று நிகழ்வுகளில் பில் கலெக்டர் சம்பந்தப்பட்ட இடங்களுக்குச் சென்று கள ஆய்வு செய்து வருவார். அவற்றில் ஏதேனும் சந்தேகம் ஏற்பட்டால் செயல் அலுவலராகிய நான் சென்று பார்ப்பேன். தங்கவேல் நகர் மனைப் பிரிவில் கட்டிட அனுமதி வழங்கியபோது நான் ஆய்வு செய்த விவரம் எனக்கு நினைவில் இல்லை. மேற்படி மனைப் பிரிவில் என்னால் கட்டிட அனுமதி வழங்கியது தொடர்பாக யாரும் ஆட்சேபனையும் செய்யவில்லை. கட்டிடம் கட்ட அனுமதி வழங்குவதற்கு முன்பு நான்கு எல்லைகள் சரியாக இருக்கிறதா என்பதை மட்டும் நான் பார்ப்பேன். மேலும், பேரூராட்சி செயல் அலுவலருக்கு வழங்கப்பட்ட அதிகார வரம்பிற்குள் இருக்கிறதா என்பதையும், நில உரிமை குறித்து சரிபார்ப்பேன். தற்போது என்னை விசாரணைக்கு அழைத்த பின்புதான் இந்த மனைப் பிரிவில் பாதியில் ஒரு பகுதியும், பூங்காவில் ஒரு பகுதியும் மனைகளோடு சேர்த்துள்ள திருத்தப்பட்டுள்ள விஷயம் எனக்குத் தெரியும்" என்று தெரிவித்துள்ளார்.

23. திரு. ஏ.பி. மோகன்குமார், திருநாகேஸ்வரம் பேரூராட்சி முன்னாள் செயல் அலுவலர் 5.12.2019 நாளிட்ட நேரடி விசாரணையில் ஆஜராகி அளித்துள்ள தமது வாக்குமூலத்தில் "நான் செப்டம்பர் 2013 பணியிலிருந்து ஓய்வு பெற்றேன். நான் கடைசியாக திருத்துறைப்பூண்டி நகராட்சி ஆணையாளராக இருந்து ஓய்வுபெற்றேன். 2004–ஆம் ஆண்டு ஓராண்டு திருநாகேஸ்வரம் பேரூராட்சியில் பணியிலிருந்தேன். இப்பேரூராட்சியில் மனைப்பிரிவில் பூங்காவிற்காக ஒதுக்கப்பட்ட 4140 சதுர அடியில் மனையின் உரிமையாளர் திரு. T. குமார் என்பவரால் உருவாக்கப்பட்ட வீட்டு மனைப் பிரிவில் மனை 13, 15, 16, 22, 23, 24 ஆகிய மனைப்பிரிவுகளுக்கு 31.5.2004ல் என்னால் அனுமதி வழங்கப்பட்டது என்கின்ற விவரம் தற்பொழுது விசாரணையின்போது காட்டப்பட்ட உதவி இயக்குநரின் கடிதம் மற்றும் தொடர்புடைய ஆவணங்களின் மூலம் தெரியவருகிறது. இது விஷயமாக தற்போதைய செயல் அலுவலரிடம் கேட்டேன். எனது கையெழுத்துதான் என்பதை அவர் குறிப்பிட்டார். எனக்கு முன்பு இருந்த திரு. பாலகிருஷ்ணன், செயல் அலுவலர் நகர் ஊரமைப்புத் துறையினரால் அனுமதித்த வரைபடத்தை திருத்துகின்ற பணியைச் செய்துள்ளார். இவர் ஏற்கனவே திருப்பெருந்துருத்தி என்கிற பேரூராட்சியில் செயல் அலுவலராக பணிபுரிந்து அங்கு மிகுந்த கலவரமாகி என்னை அவருக்குப் பதிலாக திருப்பெருந்துருத்தியில் போட்டார்கள். ஆனால் நான் பணியில் சேர்ந்த போது அங்கு அவர் Record–ஐ திருத்தியுள்ளார் என்பது எனக்குத் தெரியாது. அலுவலகத்தில் உள்ள

பதிவேடுகளைப் பார்த்து நான் ஒப்புதல் அளித்தேன். தற்பொழுது விசாரணைக்கு வந்தபிறகுதான் இதுபோன்ற நடந்த விவரம் எனக்குத் தெரியும்" என்று தெரிவித்துள்ளார்.

24. தஞ்சாவூர் மாவட்டம், திருநாகேஸ்வரம் பேரூராட்சிக்குட்பட்ட தங்கவேல் நகர் மனைப்பிரிவிலுள்ள அனைத்து மனைகளுக்கான கட்டிட அனுமதிகள் வழங்கப்பட்ட விவரங்களை இம்முறைமன்ற நடுவம் பரிசீலிக்கவேண்டுமென கருதியதால், கட்டிட வரைபட அனுமதி அளித்துள்ள பதிவேடு மற்றும் அவற்றிற்கான கோப்புகள் மற்றும் திருநாகேஸ்வரம் பேரூராட்சி மன்ற தீர்மான எண்.203/24.3.2003க்கான நகல் ஆகியவற்றை இம்முறைமன்ற நடுவ பரிசீலனைக்கு அனுப்பிவைக்குமாறு திருநாகேஸ்வரம் பேரூராட்சி செயல் அலுவலர் இம்முறைமன்ற நடுவத்தினால் பணிக்கப்பட்டார்.

25. அதனடிப்படையில், திருநாகேஸ்வரம் பேரூராட்சி செயல் அலுவலர் கடித எண்.ந.க.எண்.131/2015 நாள் 04.12.2019 மேற்படி மனைப்பிரிவில் முன்னாள் பேரூராட்சி செயல் அலுவலர் திரு. பாலகிருஷ்ணன் என்பவரால் தன்னிச்சையாக திருத்தம் செய்யப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் கண்டுள்ள மனை எண்.1 முதல் 29 வரை உள்ள மனைகளில் கட்டிடம் கட்டுவதற்கு அனுமதி வழங்கிய செயல் அலுவலர்களின் விவரங்களை கீழ்க்குறிப்பிட்டுள்ளவாறு அட்டவணையிட்டும், கட்டிட அனுமதி வழங்கப்பட்ட விவரங்களையும், மனைப்பிரிவில் கட்டிட அனுமதி அளித்துள்ள பதிவேடு மற்றும் அவற்றிற்கான கோப்புகளையும் சமர்ப்பித்துள்ளார்:-

| வ எண் | மனை எண் | உரிமையாளர் பெயர் | கட்டிட அனுமதி வழங்கிய நாள் | அனுமதி வழங்கிய செயல் அலுவலர் பெயர் | கட்டிடத்தின் தன்மை |
|---|---|---|---|---|---|
| 1. | 13,14,15 22,23,24 | T. குமார் | 31.5.2004 | A.P.மோகன் குமார் (30.9.2013ல் ஓய்வு) | H.P பெட்ரோல் பங்க் |
| 2. | 18,19,27,28 | ராஜன் | 20.7.2012 | சீ. இராம்பிரசாத் (தற்போது வல்லம் பேரூராட்சி செ.அ) | LODGE |
| 3. | 20,29 | R. சௌமியா | 27.4.2015 | இரா. நந்தகுமார் (காலமாகிவிட்டார்) | HOTEL |
| 4. | 16, 25 | T. குமார் | -- | -- | ஆஸ்பெட்டாஸ் சீட் கூரை அமைத்து வாகனங்கள் பழுது நீக்கம் செய்யும் கடை செயல்பட்டு வருகிறது |
| 5. | 17, 26 | T. குமார் | | | காலிமனைகளாக உள்ளன |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 6. | 8 | R. தயானந்தன் | 13.6.2006 | வி. மனோகர் (ஓய்வு பெற்றுவிட்டார்) | குடியிருப்பு கட்டிடம் |
| 7. | 10 | R. ரெங்கநாதன் | 19.5.2011 | ஜோ. சுந்தரமூர்த்தி (ஓய்வு) | குடியிருப்பு கட்டிடம் |
| 8. | 3 | H. சாவித்ரி | 15.2.2013 | பூ. கமலக்கண்ணன் (மணல்மேடு பேரூ. செயல் அலுவலர்) | குடியிருப்பு கட்டிடம் |
| 9. | 9 | G. கஸ்தூரி | 17.09.2009 | ஜோ. சுந்தரமூர்த்தி (ஓய்வு) | குடியிருப்பு கட்டிடம் |
| 10. | 4 | G.உறரிச்சந்திரா | 30.12.2005 | வி. மனோகர்(ஓய்வு) | குடியிருப்பு கட்டிடம் |
| 11. | 7 | M. நாகலெட்சுமி | 07.08.2008 | கோ. முத்து கிருஷ்ணன்(ஓய்வு) | குடியிருப்பு கட்டிடம் |
| 12. | 5 மனைகள் | N. ராணிமுத்து | 26.5.2019 (ம) 19.5.2011 | ஜோ. சுந்தரமூர்த்தி (ஓய்வு) | குடியிருப்பு கட்டிடம் |
| 13. | 1 மனை | வ. எழிலரசி | அலுவலகத்தில் ஆவணம் கிடைக்கப்பெறவில்லை | | குடியிருப்பு கட்டிடம் |
| 14. | 1 மனை | பி. அன்பழகன் | 08.12.2012 | அ. மோகன்தாஸ் (ஓய்வு) | குடியிருப்பு கட்டிடம் |

26. தங்கவேல் நகர் மனை அபிவிருத்தியாளர் திரு. T. குமார் அவர்களை விசாரிக்க இம்முறைமன்ற நடுவம் கருதி, அவரை 12.02.2020 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகுமாறு இம்முறைமன்ற நடுவ 02.01.2020 நாளிட்ட அழைப்பாணை அனுப்பப்பட்டது. திரு. T. குமார் தனது 11.2.2020 நாளிட்ட கடிதத்தில் வயது முதிர்வின் காரணமாகவும், நீண்ட நாட்களாக உள்ள நீரிழிவு நோய் மற்றும் அதற்கான மருத்துவத்தின் காரணமாகவும் தன்னால் நீண்டதூர பயணம் செய்ய முடியாத காரணத்தினாலும், தான் தொடர்ந்து மருத்துவமனையில் இருந்த காரணத்தினாலும் தன்னால் நேரடி விசாரணையில் ஆஜராக முடியவில்லை என்றும், தம்மை விசாரணைக்கு நேரில் ஆஜராவதிலிருந்து விலக்களித்து, பிற்காலங்களில் கடிதம் மூலமாக பதிலளிக்க உதவுமாறும் கேட்டுக்கொண்டுள்ளார்.

மேலும் மனை எண்.22ல் 4140 சதுர அடி இடத்தில் பெட்ரோல் பங்க் தம்மால் நடத்தப்படவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

மேலும் 2003ல் மனைப்பிரிவு அங்கீகாரம் செயல் அலுவலரால் வழங்கப்பட்டு அதன்படியே இதுநாள் வரை நடைமுறையில் உள்ளது எனவும், தற்போதும் தொழில்நுட்ப நடைமுறைகள் அனைத்தும் (வரைபட அனுமதிக்கான) பின்பற்றப்பட்டுள்ளது. வரைபட அனுமதியில் மாற்றம் செய்த செயல் அலுவலர் அவர்கள் காலமாகிவிட்ட காரணத்தினாலும், மன்றத் தீர்மான ஒப்புதலையும் 20க்கும் மேற்பட்ட மனைகளுக்கு பேரூராட்சி ஒப்புதல்

வழங்கி வீடுகள் கட்டி வரி செலுத்தி மக்கள் பயனடைந்து நடைமுறையில் இருந்துவருவதாலும் தற்போதுள்ள நிலையிலேயே தொடர உத்தரவிடுமாறும் கேட்டுக்கொண்டுள்ளார்.

27. முறையீட்டு மனுதாரரின் மனு மற்றும் மனுவுடன் இணைத்தனுப்பப்பட்ட ஆவணங்கள், திருநாகேஸ்வரம் பேரூராட்சி செயல் அலுவலர் அளித்துள்ள விளக்க அறிக்கை மற்றும் ஆவணங்கள், மன்றத் தீர்மானங்கள், கட்டிட அனுமதிக்கான செயல்முறை ஆணையின் நகல்கள், கட்டட வரைபட அனுமதி நகல்கள், திருநாகேஸ்வரம் பேரூராட்சியில் பல்வேறு காலகட்டங்களில் செயல் அலுவலர்களாக இருந்து ஒய்வு பெற்றவர்கள், திருநாகேஸ்வரம் பேரூராட்சியில் செயல் அலுவலர்களாக இருந்து பின்னர் வேறு பேரூராட்சிகளில் செயல் அலுவலர்களாக பணிபுரிந்து வருபவர்கள், பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், தஞ்சாவூர் மண்டலம் ஆகியோரது வாக்குமூலங்கள், அறிக்கைகள், எழுத்துபூர்வமான விளங்கங்கள், திருநாகேஸ்வரம் பேரூராட்சி செயல் அலுவலரால் அளிக்கப்பட்ட கூடுதல் அறிக்கைகள், ஆவணங்கள், தங்கவேல் நகர் மனை அபிவிருத்தி குறித்த பேரூராட்சியின் கோப்புகள், ஆவணங்கள், வரைபடங்கள், நகர் ஊரமைப்புத் துறையினால் தொழில்நுட்ப அனுமதி அளித்து வழங்கப்பட்ட வரைபட நகல் மற்றும் இதர ஆவணங்கள் ஆகிய அனைத்தும் இம்முறைமன்ற நடுவத்தினால் மிகக் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டதில், கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:-

❖ தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் வட்டம், 31 அணக்குடி திருநாகேஸ்வரம் கிராமம் மற்றும் பேரூராட்சியில், இயக்குநர், நகர் ஊரமைப்புத் துறை, சென்னை அவர்களால் ஒப்புதல் வழங்கப்பட்ட குடியிருப்பு மனைப்பிரிவு தொழில்நுட்ப வரைபடத்தை மோசடியாக திருத்தி அரசுக்கு இழப்பீடு ஏற்படுத்திய நபர்கள் மீதும், பூங்கா மற்றும் பாதைகளை மீட்காமல் மீண்டும் மோசடி வரைபடத்தைக் கொண்டு கட்டிட அனுமதி வழங்கிய மற்றும் தங்கும் விடுதி கட்டிடத்திற்கு (+2 தளம்) அனுமதி வழங்கிட முயற்சிக்கும் திருநாகேஸ்வரம் பேரூராட்சி செயல் அலுவலர் திரு. நந்தகுமார் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்குமாறு கோரி திரு. அ.சி. முத்தரசு என்பவர் 4.5.2016ல் இம்முறைமன்ற நடுவத்திற்கு உரிய ஆதார ஆவணங்களுடன் புகார் மனு அளித்துள்ளார்.

❖ மேற்கண்ட புகார்கள் குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர், தஞ்சாவூர் மாவட்டம் அவர்களுக்கு மனுதாரரால் 22.6.2015ல் விரிவான புகார் மனு அளிக்கப்பட்டு, அதன் நகல் இம்முறைமன்ற நடுவத்திற்கும் மனுதாரரின் புகார் மனுவுடன் ஆதார ஆவணமாக இணைக்கப்பட்டுள்ளது.

❖ மேற்கண்ட புகார் மனுவின் நகல் துணை இயக்குநர், நகர் ஊரமைப்புத் துறை, தஞ்சாவூர், துணை இயக்குநர் (பேரூராட்சிகள்) தஞ்சாவூர் மற்றும் காவல்துறை துணை கண்காணிப்பாளர், லஞ்ச ஒழிப்புத் துறை, தஞ்சாவூர் ஆகியோருக்கு நகலிடப்பட்டு, பதிவு அஞ்சல் மூலம் அனுப்பப்பட்டுள்ளது.

- பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், தஞ்சாவூர் அவர்களது கடிதம் ஒ.மு.1863/2015/பேரூ.3 நாள் 12.09.2015ன் வாயிலாக மனுதாரருக்கு அனுப்பப்பட்டுள்ள பதில் அறிக்கையில் திருநாகேஸ்வரம் பேரூராட்சி, வார்டு எண்.12 அணக்குடி, திருநாகேஸ்வரம், தங்கவேல் நகர் புல எண்.30ல் குடியிருப்பு மனைப்பிரிவு அமைத்து பூங்கா மற்றும் சாலைகள் பேரூராட்சிக்கு ஒப்படைக்கப்பட்டு, 2006ஆம் ஆண்டு சென்னை நகர் ஊரமைப்பு ஆணையர் மூலமாக அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது என்றும், அதன் பின்னர் சாலைகள் மற்றும் பூங்காக்களை இட மாற்றம் செய்து பேரூராட்சி மன்ற ஒப்புதலுடன் செயல் அலுவலரால் அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும், மனுதாரரால் வணிக ரீதியின் அடிப்படையிலான தங்கும் விடுதி கட்டிடத்திற்கு பேரூராட்சியால் அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும், ஆனால் தங்கும் விடுதி கட்டிடம் பேரூராட்சி அனுமதிக்கு வரையறுக்கப்பட்டதைவிட அதிகமான சதுர அடி என்பதால் தொடர் நடவடிக்கைக்காக சென்னை நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் அனுமதிக்காக உரிய ஆவணங்கள் அனுப்பப்பட்டு பரிசீலனையில் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் புகார் மனுவில் தெரிவிக்கப்பட்ட உணவகத்திற்கு உரிய ஆவணங்களின் அடிப்படையில் பேரூராட்சியால் அனுமதி வழங்கப்பட்டு, சொத்துவரியும் விதிக்கப்பட்டு வசூல் செய்யப்பட்டுள்ளது என்றும், பெட்ரோல் பங்கிற்கு பேரூராட்சியால் அனுமதி அளிக்கப்படவில்லை என செயல் அலுவலரால் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

- மேலும் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், தஞ்சாவூர் அவர்களது கடிதம் ஒ.மு.எண்.44/2016/பேரூ.3 நாள் 14.1.2016ல் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005–ன் கீழ் மனுதாரரால் கோரப்பட்ட விவரங்களுக்கு விரிவான பதிலறிக்கை வழங்கப்பட்டுள்ளது. அதில், ஏனைய பிற விவரங்களுடன், தங்கவேல் நகர் மனைப்பிரிவுக்கு 2003ம் ஆண்டு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்றும், நகர் ஊரமைப்புத் துறை, சென்னை சிறப்பு ஆணையரின் தொழில்நுட்ப வரைபட அனுமதி மாற்றப்பட்டு, அப்போதைய செயல் அலுவலர் திரு. எஸ். பாலகிருஷ்ணன் அவர்களால் அனுமதிக்கப்பட்டுள்ள மனைப்பிரிவு வரைபடம் ஒன்று உள்ளது. தொழில்நுட்ப வரைபட அனுமதி மாற்றப்பட்டுள்ளதற்குண்டான எவ்வித கோப்புகளும், பதிவுகளும், தகவல்களும் தங்கவேல் நகர் மனைப்பிரிவு கோப்பில் இல்லை. செயல் அலுவலரால் அனுமதி வழங்கப்பட்ட வரைபடத்தில் உள்ளவாறுதான் பூங்கா, சாலைகள் அனைத்தும் தானமாக திருவிடைமருதூர் சார் பதிவு அலுவலகம் மூலம் பேரூராட்சிக்கு கிடைக்கப்பெற்றுள்ளது. அந்த வரைபடத்தில் உள்ள மனை எண்கள் கொண்டே அனைத்து மனைகளும் விற்பனையாகி பதிவாகி உள்ளன என்ற விவரமும் அளிக்கப்பட்டுள்ளது.

- மனுதாரரின் புகார் மனு மீது திருநாகேஸ்வரம் பேரூராட்சி செயல் அலுவலரால் 21.03.2017ல் விரிவான விளக்க அறிக்கை இம்முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.

- மனுதாரர் 10.5.2017 அன்றைய நேரடி விசாரணையின்போது ஆஜராகி அளித்துள்ள வாக்குமூலத்தில் திருத்தப்பட்ட போலியான வரைபடத்தின் மூலம் நிறைய கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளன. இந்த இடத்தில் பெட்ரோல் பங்கு இருக்கிறது. சாலை இருக்கவேண்டிய இடத்தில் ஒப்பிலி ரெசிடன்சி என்ற தங்கும் விடுதி அனுமதி பெறாமல் இயங்கி வருகிறது. மேலும் ஒப்பிலி பவன் என்ற ஹோட்டல் உள்ளது. இதற்கு அங்கீகாரம் பேரூராட்சியால் வழங்கப்பட்டுள்ளது. எனவே, போலியாக தயார் செய்யப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டு அதன் மூலம் கட்டப்பட்ட கட்டிடங்களுக்கு சீல் வைத்திடவும், கட்டிடங்களை அகற்றவும், பூங்கா மற்றும் சாலைகளை மீட்கவும் மற்றும் சம்மந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறும் கோரியுள்ளது ஊர்ஜிதமாகிறது.

- மனுதாரர் தனது வாக்குமூலத்துடன் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005–ன் கீழ் நகர் ஊரமைப்புத் துறை இயக்குநர்/மேல்முறையீட்டு அலுவலரால் மனுதாரருக்கு அளிக்கப்பட்டுள்ள பதிலறிக்கையின் நகலில் ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம் மவ/ந.ஊ.இ எண்.334/2002ன் Blue print நகல் சான்றொப்பமிட்டு வழங்கப்பட்டுள்ளது என்றும், மேற்படி வரைபடத்திற்கு நகர் ஊரமைப்பு இயக்குநர் அலுவலகத்தால் தொழில்நுட்ப ஒப்புதல் மட்டும் வழங்கப்பட்டுள்ளதாகவும், இதன் பின்னர் நில உரிமை உள்ளாட்சியால் உறுதி செய்யப்பட்டு, சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடுகளை உள்ளாட்சி தானமாக பெற்றுக்கொண்டு இறுதி ஒப்புதல் வழங்கப்பட்ட பின்னரே இம்மனைப்பிரிவு ஒப்புதல் பெற்ற மனைப்பிரிவாக கருதப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

- 10.5.2017 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜரான செயல் அலுவலர் திரு. இரா. இராஜா என்பவர் மனுதாரர் மனுவில் கூறியிருக்கிற புகார்கள் உண்மைதான். திரு. பாலகிருஷ்ணன் (8.6.2019 அன்று காலமானவர்) என்னும் செயல் அலுவலர் இதற்கு முழு பொறுப்பாளர். திரு. நந்தகுமார் நேரடியாக இதற்கு தொடர்பில்லை. காரணம் அசல் அங்கீகாரத்தை மாற்றி பேரூராட்சி ஒப்புதல் பெற்றபின்பு ஒப்புதல் பெற்ற வகையில் அவர் கட்டிடம் கட்டுவதற்கு அனுமதி கொடுத்துள்ளார் என்று வாக்குமூலம் அளித்துள்ளதால் முறைகேடுகள் நடைபெற்றுள்ளன என்பது ஊர்ஜிதமாகிறது.

- நகர் ஊரமைப்பு சிறப்பு ஆணையரால் ஒப்புதல் அளிக்கப்பட்ட கடிதம் ந.க.எண்.7738/2002/எல்ஏ1 நாள் 4.12.2002ல் மனைப்பிரிவிற்கு அளிக்கப்பட்டுள்ள ஒப்புதலுடன் அளிக்கப்பட்டுள்ள பல்வேறு மனைப்பிரிவு நிபந்தனைகளில், நகர் ஊரமைப்புத் துறையால் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறாக மனையின் அளவுகள், சாலைகளின் அமைப்புகள், அளவுகள், பொது ஒதுக்கீடு அளவுகள் ஆகியவற்றை மாற்றுதல் மற்றும் மனையை மேலும் உட்பிரிவு செய்தல் ஆகியவற்றை

எக்காரணத்தை முன்னிட்டும் நகர் ஊரமைப்புத் துறையின் முன் ஒப்புதலின்றி செய்தல் கூடாது என்று தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது.

- ❖ திருநாகேஸ்வரம் பேரூராட்சி செயல் அலுவலரது 7.9.2017 நாளிட்ட கடிதத்தில் நகர் ஊரமைப்புத் துறை சிறப்பு ஆணையரால் 04.12.2002இல் தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டதையடுத்து, திருநாகேஸ்வரம் பேரூராட்சி மன்ற தீர்மான எண்.203 நாள் 29.05.2003ல் மனைப்பிரிவினை அங்கீகரித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது என்றும், நகர் ஊரமைப்புத் துறை சிறப்பு ஆணையரால் தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்ட வரைபடத்தை அப்போதைய செயல் அலுவலர் திரு. எஸ். பாலகிருஷ்ணன் என்பவர் எழுத்துபூர்வமான ஆணை மற்றும் மாறுதல் வரைபடம் அனுமதியின்றி தன்னிச்சையாக 30 அடி சாலையினை 23 அடி சாலையாக மாற்றியும், முன்புறம் ஒதுக்கீடு செய்யப்பட்ட பூங்காவிற்கான இடத்தை பின்புறம் மாற்றி மேற்கண்ட மனைப்பிரிவிற்கு வரைபடம் தயார் செய்து, செயல் அலுவலரின் நடவடிக்கைகள் ந.க.எண்.51/2002 நாள் 30.5.2003 மூலம் அங்கீகாரம் வழங்கியும் வரைபட ஒப்புதல் செய்தும் வழங்கியுள்ளார் என்றும், வரைபடத்தில் திருத்தம் செய்யப்பட்டமைக்கான காரணங்கள் குறித்து சம்மந்தப்பட்ட கோப்புகளில் குறிப்புகள் ஏதும் சம்மந்தப்பட்ட செயல் அலுவலரால் ஏதும் எழுதப்படவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

- ❖ மனுதாரர் இம்முறைமன்ற நடுவத்திற்கு தமது புகார் மனு குறித்து அளித்துள்ள கூடுதல் விவரங்களில் மனைப் பிரிவிற்கு ஒப்புதல் கிடைத்துவிட்டது என்று இடத்தின் உரிமையாளர்கள் T. குமார், T. சுந்தரமூர்த்தி மற்றும் அப்போதைய செயல் அலுவலர் S. பாலகிருஷ்ணன் ஆகியோர் கூட்டு சதியில் ஈடுபட்டு 2.5.2003 அன்று திருவிடைமருதூர் சார் பதிவாளர் அலுவலக பத்தி எண்.660/2003 என்ற தான பத்திரம் மூலம் தங்கவேல் நகர் மனைப்பிரிவிற்கு சாலை மற்றும் பூங்கா ஒதுக்கி நிலம் பதிவு செய்தனர் (இதுவும் ஒரு போலியான வரைபடம்) என்றும், பின்பு மேற்கண்ட நபர்களால் திருத்திய வரைபடம் (Revised Layout) தயாரிக்கப்பட்டு, நகர் ஊரமைப்புத் துறையால் வழங்கப்பட்ட மனைப் பிரிவு அனுமதி எண் மற்றும் அலுவலக எண்ணைப் பயன்படுத்தி தானப் பத்திர எண்.660/2003ஐ ரத்து பத்திரம் எண்.1754/2003 நாள் 28.5.2003ன்படி ரத்து செய்துவிட்டு, இவர்கள் தயாரித்த Revised Layoutன்படி 29.5.2003 அன்று தானப்பத்திரம் 774/2003 பதியப்பட்டு கூட்டுச் சதியில் ஈடுபட்டுள்ளனர் என்றும், மேற்படி போலியான வரைபடத்தின்படி 23.1.2004ல் T. குமார் மற்றும் Hindustan Petrolium Corporation Limited, Regional Office, Madurai (G.S.V Prasad) ஆகியோருக்கிடையே ஏற்பட்ட இட வாடகை ஒப்பந்தப் பத்திரப்படி, மேற்கண்ட இடத்தில் பெட்ரோல் மற்றும் டீசல் பம்பு ஸ்டேஷன் இயங்கி வருகிறது (திருவிடைமருதூர் சாா பதிவாளர் அலுவலக ஆவண பதிவு எண்.100/2004 பத்திரம் 1 நாள் 23.01.2004) என்று குறிப்பிட்டுள்ளார்.

- மேலும், நகர் ஊரமைப்புத் துறை மூலம் வழங்கப்படும் குடியிருப்பு மனைப் பிரிவுகளின் கடை, சாலை மற்றும் பூங்காக்களுக்கு ஒதுக்கப்படும் இடத்தைத் தவிர மற்ற இடங்களில் வணிக நிறுவனமோ, பெட்ரோல் நிலையமோ, தங்கும் விடுதி, ஆடம்பர உணவு விடுதி மற்ற வியாபார நிறுவனங்கள் இயங்கக் கூடாது என்று பேரூராட்சி அதிகாரிகளுக்குத் தெரிந்தும், தற்போது அந்த மனைப் பிரிவில் சட்டத்தை மீறி ஏகப்பட்ட நிறுவனங்கள் இயங்கி வருவதும், இதற்கு பேரூராட்சி அதிகாரிகள் உடந்தையாக இருப்பதும், அற்பத்தனமமக இருப்பதும் கவலைக்குரியது என்று மனுதாரரால் குறிப்பிடப்பட்டுள்ளது.
- மனுதாரரால் குறிப்பிடப்பட்டுள்ள பெட்ரோல் பங்க் ஒப்பந்த காலம் 1.2.2004 முதல் 31.1.2034 வரை வெவ்வேறான காலங்களில் வெவ்வேறு மாத வாடகையில் இயங்கிவருவது ஆவணங்களின்படி ஊர்ஜிதமாகிறது.

- பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், தஞ்சாவூர் மண்டலம், தஞ்சாவூர் அவர்களது 5.8.2019 நாளிட்ட அறிக்கையில் தஞ்சாவூர் மாவட்டம், திருநாகேஸ்வரம் பேரூராட்சி, வார்டு எண்.12 புல எண்.30 (பகுதி) மற்றும் 31–1ஏ–ல் 2.14 ஏக்கர் அளவுள்ள இடத்தில் திரு. குமார், த/பெ தங்கவேல் என்பவர் 93,219 சதுர அடியில் 29 மனைகளும், 9473 சதுர அடியில் பூங்காவிற்கான திறவையிடமும் மற்றும் சாலைப் பயன்பாட்டிற்கு 17549.5 சதுர அடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டு, மனைப்பிரிவு அமைத்திட சென்னை நகரமைப்பு சிறப்பு ஆணையரால் ம.வ/ந.ஊ இ.எண்.334/2002 நாள் 04.12.2002 ஆணையின்படி வரைபடம் அங்கீகாரம் மற்றும் தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டு, பேரூராட்சி மன்ற சாதாரணக்கூட்ட தீர்மான எண்.203 நாள் 29.5.2003ல் அங்கீகரிக்கப்பட்டுள்ளதாகவும், நகர் ஊரமைப்புத் துறையால் தொழில்நுட்ப அனுமதி வழங்கி அளிக்கப்பட்ட வரைபடத்தில் பூங்காவிற்காக ஒதுக்கப்பட்ட கும்பகோணம் சாலையினை ஒட்டி உள்ள 4140 சதுர அடி இடத்தினை மனை எண்.1க்கு மாறுதல் செய்தும், மேற்படி பூங்கா இடத்தினை மனையாகவும் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றும், மேலும் கிழமேல் 30 அடி அகலம் உள்ள சாலையினை 23 அடி சாலையாக மாற்றம் செய்து வேறு மனைப்பிரிவு வரைபடம் தயார் செய்து, அன்றைய தேதியில் செயல் அலுவலராக பணிபுரிந்து வந்த திரு. எஸ். பாலகிருஷ்ணன் என்பவரது செயல்முறைகள் ந.க.எண்.51/2002 நாள் 30.5.2003ன்படி திருத்திய மனைப்பிரிவு வரைபடம் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார். திருத்தப்பட்ட வரைபடத்தில் கண்டுள்ள விவரங்களின்படி பூங்காவிற்காக ஒதுக்கப்பட்ட இடங்கள் மற்றும் சாலைகள் அனைத்தும் மனைப்பிரிவு உரிமையாளர்கசால் 29.5.2003 அன்று திருவிடைமருதூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் தானப்பத்திரம் மூலம் பேரூராட்சி செயருக்கு பதிவு செய்யப்பட்டு, ஒப்படைக்கப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

- மேலும், பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், தஞ்சாவூர் அவர்களது 12.9.2019 நாளிட்ட அறிக்கையில் திருநாகேஸ்வரம் பேரூராட்சியில் புல எண்.30 மற்றும் 31-Aக்கு அரசின் சந்தை வழிகாட்டி மதிப்பு சதுர அடி ஒன்றிற்கு ரூ.502/– (ரூபாய் ஐநூற்று இரண்டு மட்டும்) பதிவுத்துறை அலுவலகத்தின் இணையதள

TP3-Rv.No.2412-2017 பதிவிறக்கம் செய்யப்பட்டதாகவும், திருத்தப்பட்ட மனைப்பிரிவு மனை எண்கள்.13 முதல் 20 வரை உள்ள மனைகளில் நீளத்தில் சேர்க்கப்பட்டுள்ள 2 அடிக்கான மதிப்பீட்டுத் தொகை 1045 சதுர அடிக்கு ரூ.5,24,590/– (ரூபாய் ஐந்து லட்சத்து இருபத்தி நான்காயிரத்து ஐநூற்று தொன்னூறு மட்டும்) ஆகும். மற்றும் மனை எண்கள்.22 முதல் 29 வரை நீளத்தில் சேர்க்கப்பட்டுள்ள 5 அடிக்கான மதிப்பீட்டுத் தொகை 1400 சதுர அடிக்கு ரூ.7,02,800/– (ரூபாய் ஏழு லட்சத்து இரண்டாயிரத்து எண்ணூறு மட்டும்) ஆகும்.

- ❖ மனைப்பிரிவில் பூங்காவிற்காக ஒதுக்கப்பட்ட 4140 சதுர அடிக்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.20,78,280/– (ரூபாய் இருபது லட்சத்து எழுபத்தெட்டாயிரத்து இருநூற்று எண்பது மட்டும்). மனை எண்கள்.13,14,15,22,23,24 ஆகிய மனைப்பிரிவிகளுக்கு 31.5.2004இல் முன்னாள் செயல் அலுவலர் திரு. ஏ.பி மோகன் குமார் என்பவரால் கட்டிட அனுமதி வழங்கப்பட்டு, மனையின் உரிமையாளர் திரு. டி. குமார் என்பவரால் பெட்ரோல் பங்க் கட்டிடம் கட்டப்பட்டுள்ளது எனவும், மனை எண்கள்.18.19,27,28 ஆகிய மனைப்பிரிவுகளுக்கு 29.7.2012இல் வல்லம் பேரூராட்சியில் செயல் அலுவலராக பணிபுரிந்துவரும் திரு. சீ. இராம்பிரசாத் என்பவரால் கட்டிட அனுமதி வழங்கப்பட்டு, மனையின் உரிமையாளர் திரு. ராஜன் என்பவரால் லாட்ஜ் கட்டப்பட்டுள்ளது எனவும், மனை எண்கள்.16,25 ஆகிய மனைப்பிரிவுகளுக்கு முன்னாள் செயல் அலுவலர் லேட். இரா. நந்தகுமார் என்பவரால் கட்டிட அனுமதி வழங்கப்பட்டு, மனையின் உரிமையாளர் டி.குமார் என்பவரால் ஆஸ்பெட்டாஸ் சீட் கூரை அமைத்து, வாகனங்கள் பழுதுநீக்கம் செய்யும் கடை செயல்பட்டு வருகிறது என்றும், மனை எண்.17,26 ஆகிய மனைகள் மட்டுமே கட்டடங்கள் ஏதும் கட்டப்படாமல் காலி மனைகளாக உள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

- ❖ நகர் ஊரமைப்புத் துறையினால் ஒப்புதல் அளிக்கப்பட்ட தொழில்நுட்ப வரைபடத்தினை முறைகேடாக திருத்தி அதற்கு அனுமதி அளித்த திருநாகேஸ்வரம் பேரூராட்சி செயல் அலுவலர் திரு. S. பாலகிருஷ்ணன் 08.06.2019லும், திரு. நந்தகுமார் திருநாகேஸ்வரம் பேரூராட்சி முன்னாள் செயல் அலுவலர் 17.08.2017லும் காலமாகிவிட்டனர் என்பது அவர்களது இறப்புச் சான்றிதழ்களின்மூலம் தெரியவருகிறது.

28. மேற்குறிப்பிடப்பட்டுள்ள சூழ்நிலையில், மனுதாரர் திரு. அ.சி. முத்தரசு என்பவரால் அளிக்கப்பட்டுள்ள புகார் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் நிரூபணமாகின்றன என்பதில் எந்தவித ஐயப்பாடும் இல்லை. மனுதாரரது புகார் மனு குறித்து பல்வேறு காலக்கட்டங்களில் நடைபெற்றுள்ள நேரடி விசாரணைகளின்போது பெறப்பட்டுள்ள வாக்குமூலங்கள், ஆவணங்கள், வரைபடங்கள், பெட்ரோல் பங்க் இட வாடகை ஒப்பந்த ஆவணம் மற்றும் இதர ஆவணங்களின்படி சந்தேகத்திற்கு இடமில்லாமல் மோசடிகள் அரங்கேற்றப்பட்டுள்ளதை பட்டவர்த்தமாக வெளிச்சம் போட்டு காட்டப்பட்டுள்ளது. நகர் ஊரமைப்புத் துறையினரால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள மனைப்பிரிவிற்கான தொழில்நுட்ப அனுமதியை மாற்றி, அப்போதைய செயல் அலுவலர் மற்றும் மனைப்பிரிவு அபிவிருத்தியாளர் திரு. T. குமார் ஆகியோர் திட்டமிட்டே

இம்மோசடியை செய்துள்ளது அம்பலமாகிறது. தங்கவேல் நகர் மனைப்பிரிவில் அமையப்பெற்றுள்ள மொத்தம் 29 மனைகளில் 10 மனைகளை திரு. T. குமார் என்பவரே தன்வசப்படுத்திக்கொண்டுள்ளதும், மனை எண்கள்.13,14,15,22,23 மற்றும் 24ல் உள்ள 6 மனைகளில் கட்டிட அனுமதி பெற்று அவரால் அந்த இடத்தில் இந்துஸ்தான் பெட்ரோலியம் கார்பரேஷனுக்கு ஒப்பந்த அடிப்படையில் பெட்ரோல் பங்க் அமைத்து வாடகை பெற்றுவருவதும் அதன் ஒப்பந்த காலம் 31.1.2034 வரையில் செல்லத் தக்கதாகவும் உள்ளது. மனை உரிமையாளரே மனை எண்கள்.16,25 ஆகியவற்றில் ஆஸ்பெட்டாஸ் கூரை அமைத்து, வாகனங்கள் பழுதுநீக்கம் செய்யும் கடையையும் செயல்படுத்தி வருவதும், 17,26 ஆகிய இரு மனைகளை காலிமனைகளாக வைத்துக்கொண்டுள்ளதாலும், இம் மோசடியில் இவரது உள்நோக்கம் மேலோங்கியுள்ளதையும், அதனால் அடைந்துள்ள பயன்களை அனுபவித்தும் வருவதால் நகர் ஊரமைப்புத் துறையினால் ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவின் தொழில்நுட்ப அனுமதியை பேரூராட்சியின் முன்னாள் செயல் அலுவலரின் துணையோடு முறைகேடாக மாற்றி, திருத்திய ஒப்புதலுக்கு வழிகோலியுள்ளார் என்பதும் தெளிவாகிறது.

மேலும் மனை எண்கள்.20,29 திரு. ராஜன் என்பவரது மனைவி R. சௌமியா என்பவரது பெயரில் உள்ளதும், அதில் ஹோட்டல் இயங்கிவருவதும் தெளிவாகப்பட்டுள்ளது. ஆயினும், அரசு ஊழியரான செயல் அலுவலர் திட்டமிட்டு இந்த மோசடிக்கு உடந்தையாக செயல்பட்டது மன்னிக்க இயலாத மிகப் பெரிய குற்றச் செயலாகும். இதனை அரங்கேற்றிய திருநாகேஸ்வரம் பேரூராட்சி முன்னாள் செயல் அலுவலர் திரு. S. பாலகிருஷ்ணன் மோசடிகளுக்கு உறுதுணையாக இருந்து பணி ஓய்வு பெற்று, 8.6.2019ல் மறைந்துள்ளார். எனினும், இவரால் மோசடியாக தயாரிக்கப்பட்டு அனுமதிக்கப்பட்ட வரைபடம், நகர் ஊரமைப்புத் துறையினால் அனுமதிக்கப்பட்ட வரைபடத்துடன் ஆய்வு செய்து நடவடிக்கை மேற்கொள்ளப்படாமல், அடுத்தடுத்து வந்த செயல் அலுவலர்கள் எவராலும் கவனமாக ஆராயப்படாமல், திருத்திய மோசடியான வரைபடத்தின் அடிப்படையிலேயே வெவ்வேறான காலக்கட்டங்களில் கட்டிட அனுமதி அளிக்கப்பட்டுள்ளது வியப்பிலும் வியப்பாக உள்ளது. இம்முறைகேடுகளின் அடிப்படையில், முறைகேடாக தயாரிக்கப்பட்ட வரைபடத்தின் அடிப்படையில் மொத்தமுள்ள 29 மனைகளுக்கு 8 செயல் அலுவலர்கள் கட்டிட அனுமதி வழங்கியுள்ளதும் அவர்களில் திரு. A.P மோகன்குமார் (30.9.2013ல் ஓய்வுபெற்றவர்), திரு. இரா. நந்தகுமார் 17.08.2017ல் காலமானவர்), திரு. வி. மனோகர் (ஓய்வு பெற்றவர்), திரு. ஜோ. சுந்தரமூர்த்தி (ஓய்வு பெற்றவர்), திரு. கோ. முத்துகிருஷ்ணன் (ஓய்வு பெற்றவர்) மற்றும் திரு. அ. மோகன்தாஸ் (ஓய்வு பெற்றவர்) ஆகியோரும், திரு. பூ. கமலக்கண்ணன் (பணி விவரம் அளிக்கப்படவில்லை) முன்னாள் பேரூராட்சி செயல் அலுவலரும் அடங்குவர் என்பது ஆவணங்களின் அடிப்படையில் கண்டறியப்படுகிறது.

29. நகர் ஊரமைப்புத் துறையினரால் தொழில்நுட்ப அனுமதி அளித்து அளிக்கப்பட்ட வரைபடத்துக்கான ஒப்புதலுடன் அளிக்கப்பட்டுள்ள பல்வேறு மனைப்பிரிவு நிபந்தனைகளில், நகர் ஊரமைப்புத் துறையால் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறாக மனையின் அளவுகள், சாலைகளின் அமைப்புகள், அளவுகள், பொது ஒதுக்கீடு அளவுகள் ஆகியவற்றை மாற்றுதல் மற்றும் மனையை மேலும் உட்பிரிவு செய்தல் ஆகியவற்றை

எக்காரணத்தை முன்னிட்டும் நகர் ஊரமைப்புத் துறையின் முன் ஒப்புதலின்றி செய்தல் கூடாது என்று தெளிவாக ஆணையிடப்பட்டு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது குறிப்பிடப்பட்டுள்ளது. பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், தஞ்சாவூர் அவர்களது 12.9.2019 நாளிட்ட அறிக்கையில் திருநாகேஸ்வரம் பேரூராட்சியில் புல எண்.30 மற்றும் 31-Aக்கு அரசின் சந்தை வழிகாட்டி மதிப்பு சதுர அடி ஒன்றிற்கு ரூ.502/– (ரூபாய் ஐநூற்று இரண்டு மட்டும்) பதிவுத்துறை அலுவலகத்தின் இணையதள TP3-Rv.No.2412-2017 பதிவிறக்கம் செய்யப்பட்டதாகவும், திருத்தப்பட்ட மனைப்பிரிவு மனை எண்கள்.13 முதல் 20 வரை உள்ள மனைகளில் நீளத்தில் சேர்க்கப்பட்டுள்ள 2 அடிக்கான மதிப்பீட்டுத் தொகை 1045 சதுர அடிக்கு ரூ.5,24,590/– (ரூபாய் ஐந்து லட்சத்து இருபத்து நான்காயிரத்து ஐநூற்று தொன்னூறு மட்டும்) ஆகும். மற்றும் மனை எண்கள்.22 முதல் 29 வரை நீளத்தில் சேர்க்கப்பட்டுள்ள 5 அடிக்கான மதிப்பீட்டுத் தொகை 1400 சதுர அடிக்கு ரூ.7,02,800/– (ரூபாய் ஏழு லட்சத்து இரண்டாயிரத்து எண்ணூறு மட்டும்) ஆகுமென்றும், மனைப்பிரிவில் பூங்காவிற்காக ஒதுக்கப்பட்ட 4140 சதுர அடிக்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.20,78,280/– (ரூபாய் இருபது லட்சத்து எழுபத்தெட்டாயிரத்து இருநூற்று எண்பது மட்டும்) என்றும் குறிப்பிட்டுள்ளதால், இம்முறைகேடுகளின் மூலம் பேரூராட்சிக்கு ஏற்பட்டுள்ள வருவாய் இழப்பு அதிகமென தெளிவாக தெரியவருகிறது.

மேலும், சாலைகள் மற்றும் பூங்காக்கள் இடமாற்றம் செய்யப்பட்டும், நீள அகலத்தில் மனைப்பிரிவில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ள நிலையிலும், பேரூராட்சிக்கு தானமாக அளிக்கப்படவேண்டிய இடங்களில் குறையளவுகள் ஏற்பட்டு, அதனால் நிதியிழப்பும் ஏற்பட்டுள்ளது. ஆனால் மனைப்பிரிவு உரிமையாளர் இதன்மூலம் ஆதாயம் பெற்றுள்ளார் என்பதை மறுக்க இயலாது. முறைகேடுகளின் மூலம் இவர் பெற்றுள்ள கூடுதல் ஆதாயங்களினால் பேரூராட்சிக்கு வழங்கப்படவேண்டிய பொது இடங்களிலிருந்து இவர் பெரும் ஆதாயம் பெற்றுள்ளதால், இவரிடமிருந்து அதற்கான இழப்பீட்டுத் தொகையினை வசூலிக்க வேண்டியது பேரூராட்சிகளின் ஆணையரகத்தின் கடமையாகும் என்பதை இம்முறைமன்ற நடுவம் வலியுறுத்துகிறது. இவ்வாறான செயல் மூலம் அவர் ஆதாயம் கண்டுள்ளார் என்பது மட்டுமல்லாது, நகர் ஊரமைப்புத் துறையினரால் அனுமதி அளிக்கப்பெற்ற வரைபடத்தினை மாற்றி பேரூராட்சி செயல் அலுவலர் உதவியுடன் முறைகேட்டில் ஈடுபட துணிந்து, பல்வேறு முறைகேடுகளையும் அவர் அறங்கேற்றியுள்ளது தெள்ளத் தெளிவாகிறது.

திருத்தப்பட்ட போலியான வரைபடத்தின் மூலம் நிறைய கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளதாகவும், பெட்ரோல் பங்க் இயங்கிவருவதாகவும், சாலை இருக்கவேண்டிய இடத்தில் ஒப்பிலி ரெசிடன்சி என்ற தங்கும் விடுதி அனுமதி பெறாமல் இயங்கிவருவதும், ஒப்பிலி பவன் என்ற உேறாட்டல் உள்ளது தெரியவருகிறது. முறைகேடாக கட்டப்பட்டுள்ள இக்கட்டிடங்களை அகற்றிடவும், பூங்கா மற்றும் சாலைகளை மீட்கவும் மற்றும் இம்முறைகேடுகளுக்குக் காரணமானவர்கள் மீது நடவடிக்கை எடுக்கும்படியும் மனுதாரரால் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளதால், இது குறித்து பேரூராட்சிகளின் ஆணையாளர், நகர் ஊரமைப்புத் துறையுடன் கலந்தாலோசித்து நகர் ஊரமைப்புத் துறையினரால் அனுமதிக்கப்பட்ட தொழில்நுட்ப (Technical Sanction) வரைபடத்தின் அடிப்படையில், மேற்கொள்ளப்படவேண்டிய மீட்பு நடவடிக்கைகளை முடிவு செய்து உரிய மேல் நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார். மேலும்,

இம்முறைகேடுகளுக்குக் காரணமான பேரூராட்சி செயல் அலுவலர்கள் மீது உரிய விதிகளின்கீழ் கடுமையான ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளவும், பேரூராட்சிக்கு ஏற்பட்டுள்ள இழப்புக்குக் காரணமானவர்களிடமிருந்து அதற்குண்டான தொகையை வசூலித்து பேரூராட்சி கணக்கில் வரவாக்கிடவும், குற்றம் புரிந்த பணியாளர்கள் மீது மிக கடுமையான தண்டனை வழங்கிடுமாறும் அறிவுறுத்தப்படுகிறார். மேலும் இதுபோன்ற முறைகேடுகள் இனிவரும் காலங்களில் நிகழாதிருக்க உரிய கண்காணிப்பினை பேரூராட்சி நிர்வாகம் உயர் மட்ட அலுவலர்களைக் கொண்ட குழு அமைத்து உறுதிபடுத்திடுமாறும் பேரூராட்சி ஆணையாளருக்கு ஆணையிடப்படுகிறது. இது குறித்து கண்டிப்பான சுற்றறிக்கை தயார் செய்து, அனைத்து பேரூராட்சிகளின் செயல் அலுவலர்களுக்கும், பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்களுக்கும் அனுப்ப பேரூராட்சிகளின் ஆணையாளர் அறிவுறுத்தப்படுகிறார்.

2022ஆம் ஆண்டு, பிப்ரவரி திங்கள் 3–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒம்)/x x x x x

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

திரு. அ.சி முத்தரசு,
த/பெ அ. சின்னவேலு, 2A, சிங்காரத்தோட்டம், கும்பகோணம் சாலை,
திருநாகேஸ்வரம், தஞ்சாவூர் மாவட்டம்–612 204.

செயல் அலுவலர்,
திருநாகேஸ்வரம் பேரூராட்சி, திருநாகேஸ்வரம், தஞ்சாவூர் மாவட்டம்–612 204
நகர் ஊரமைப்புத் துறை சிறப்பு ஆணையர்,
நகர் ஊரமைப்புத் துறை அலுவலகம், அண்ணா சாலை, சென்னை–600 002.
மாவட்ட ஆட்சித் தலைவர், தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர்.
பேரூராட்சிகளின் ஆணையாளர், பேரூராட்சிகளின் ஆணையரகம்,
நகர் நிர்வாக அலுவலகம், ராஜா அண்ணாமலைபுரம், எம்.ஆர்.சி நகர், சென்னை–28
இணை இயக்குநர் (பொது) மற்றும் ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
பேரூராட்சிகளின் ஆணையாளர் அலுவலகம், நகர் நிர்வாக அலுவலகம்,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை–600 028. (பெயரிடப்பட்ட உறையில்)
பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், தஞ்சாவூர் மண்டலம், தஞ்சாவூர்
நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்
இ.கோ/உதிரி

–/ஆணைப்படி/அனுப்பப்படுகிறது/–

07/02/22

செயலாளர்